தென்மொழி

பூட்டறுக்கப் புறப்படுவீர்!

ஏட்டகத்துப் பலவாறாய்த் தமிழுணர்வை
ஆள்வோருக் கெழுதிக் காட்டி,
நாட்டகத்துத் தமிழர்நலம் நசுக்குகின்ற
போக்குக்கு நயன்மை கேட்டோம்!
வேட்டெஃகத்தை எடுத்தால்தான் விடுதலையே
தமிழகத்தில் விளையும் என்றால்,
பூட்டறுக்கப் புறப்படுவீர் மறவர்களே,
உரிமைநலம் புதுக்கு தற்கே!

வாட்டுகின்ற வறுமைக்கும் எந்தமிழர்
அடிமையிலே வாடு தற்கும்,
நீட்டுகின்ற வெடிக்குழல்தான் ஒருமுடிவைத்
தமிழகத்தில் நிகழ்த்தும் என்றால்,
காட்டுங்கள் தமிழ்மறத்தை — தொல்லடிமை
கட்டறுக்கும் காளை யோரே,
தீட்டுகின்ற பட்டயத்தில் நும்பெயரை
முதல் பெயராய்த் தீட்டு தற்கே!

சுவடி: 12. விலை:
ஓலை: 6. ஓர் உருபா.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

நமக்கு வந்த மடல்கள்.

0 : 443 : அன்புமிகு ஐயா அவர்கட்கு வணக்கம் பல. தங்களின் "உழைப்பை அவமதிக்கும் செயல்" என்னும் முகப்புப் பாடல் கண்டேன். நூற்றுக்கு நூறு உண்மை. ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு சிங்கப்பூரில் பருவ மழை தவறியது. வெளிநாட்டிலிருந்து செயற்கை மழை பெய்விக்கும் வானூர்திகள் வரவழைக்கப்பட்டு வெற்றிகரமாக தண்ணீர்ப் பஞ்சம் தீர்க்கப்பட்டது! வெளிநாட்டினர் இவ்வகை அறிவியல்களிலே தழைப்பதிகம் காண்கின்றனர்கள். ஆனால் இங்கோ............... !

ஓராண்டாக மழை பெய்யாமல் தமிழக மக்கள் பட்ட தொல்லையைக் கண்ணாரக் கண்டும், நடுவணரசின் அமைச்சர் திரு. ஒய். பி. சவாண் மேற்கண்டவாறு செயற்கை மழை முறைகளிலே எதிலும் ஈடுபடாமல், "கடந்த மார்ச்சு மாதம் இரண்டு நாள் பெய்த மழையால் தமிழகத்தின் வறுமை நீங்கியது" என்று சொன்னார்! இவ்வகைச் சவங்கை நடுவணரசு அமைச்சர்களோடு இன்னும் எவ்வளவு நாட்கள் மாரடிக்க வேண்டுமோ? மூண்டங்கள் நம் பணத்தைத் தின்று கொண்டே நமக்குக் கணியம் சொல்கின்றன!

—இலெமூரியன், அம்மாப்பேட்டை, தஞ்சை.

0 : 444 : தமிழக விடுதலையை உயிர்மூச்சாகக்கொண்ட அரிமாவே வணக்கம்! இதுவே தென்மொழிக்கு நான் எழுதும் முதல் மடல். கடந்த இரண்டாண்டுகளாகத் 'தென்மொழி'யின் ஒப்புயர்வற்ற சிறப்பினைக் கண்டு தென்மொழி காட்டும் நற்பாதை, வருங்கால உரிமைத் தமிழகத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதைப் புரிந்து கொண்டு அதன் வழி நடப்பவன்.

தென்மொழி சுவடி 12 ஓலை 5, கையில் கிடைப்பதற்கு முதல் நாள் தமிழகத்தின் அறிவியல் முன்னேற்றம் பற்றியும், அறிவியலை அயன்மொழியினின்று தமிழ்மொழிக்கு மொழி பெயர்ப்பது பற்றியும், அறிவியல் நெறிமுறைகளை (law) யாப்பு வடிவில் கொண்டு வருவதின் சிறப்புப் பற்றியும்; என் நெருங்கிய நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். மேலும் மேற்சொன்னவற்றை எவ்வகையிலேனும் செய்யவேண்டும் என்றும் எண்ணங்கொண்டேன்.

தென்மொழியை மறுநாள் வாங்கிப் பார்த்தவுடன் யானும் என் நண்பனும் வியப்புக்கடலில் ஆழ்ந்தோம். எங்கள் எண்ணம் செயலாகவே முடிந்திருப்பதைக்கண்டு பெரிதும் வியப்புற்றோம். திரு. இல. க. இரத்தினவேல் அவர்களை, அவர்களால் இயன்ற அளவு தமிழன்னைக்கு அறிவியல் மாலைகளைச் சார்த்துமாறு வேண்டுகின்றேன். இதனால் உணர்ச்சி இல்லாப் 'படித்த மாமேதைகள்' இனிமேலாவது விழிப்பினைப் பெறுவார்களா என எதிர்பார்க்கின்றேன்.

—தாமரைக்கோ, புதுவை-10.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க)

எச்சரிக்கை ! இந்திமொழி மீண்டும் தலைநீட்டுகிறது!

பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கங்கள். தங்களின் கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டுவருவது தமிழ் அன்பன் ஒருவனின் கடமை என்பதன் விளைவே இம்மடல்.

ஏறத்தாழ ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் மாணவர்கள் நடத்திய இந்திப் போராட்டத்தாலும், இன்றைய நம்மவர்களின் அரசாலும் தமிழகத்தை விட்டு நீங்கியதாக எண்ணப்படுகின்ற இந்திமொழி, உண்மையில் நீங்கவில்லை என்பது கண்கூடு. நடுவண் அரசின் சார்பாக இங்கே செயல்படுகின்ற தொடர் வண்டி நிலையம், அஞ்சல் நிலையம், வானொலி நிலையம் மற்றும் இன்னோரன்ன நிலையங்களே இந்திமொழியின் நுழைவாயில்கள் என்பது தாங்கள் அறிந்ததே. தமிழ்நாட்டு மக்கள் மொழிப்பற்று ஊட்டப்பெற்று விழித்தெழும்போது, இந்திமொழி போவது போலப் போக்குக் காட்டி, மீண்டும் சில திங்கள்கள்—சில ஆண்டுகள் கால அளவைக்குள் வருகின்ற நிலை இங்குக் கருதத்தக்கது.

இம்முறையிலேயே போவதும் வருவதுமாகப் போக்குக்காட்டும் நிலை நல்லதன்று. இந்திமொழிப் பற்றற்றவர்களே என்றும் நிலையாகத் தமிழ்நாட்டின் ஆட்சியாளர்களாக இருந்தால், நாம் கவலைப் படப்போவதில்லை. நிலைமை மாறி வடவர் மேலாண்மையே ஏற்றுக் கொள்ளும் அடிமை மனப்பாங்குடையவர் ஆட்சியாளராக மாறநேர்ந்தால்,நமதருமைத்தமிழ்மொழியின் நிலை கவலுதற்குரித்து.ஆகவே இந்திமொழியை நிலையாக ஒழிப்பது நமது செயலாகிறது. அதன் பொருட்டு முன்னம் யான் குறிப்பிட்ட நுழைவாயில்களைக் கண்காணிப்பது இன்றியமையாததாகிறது. மற்றத் துறைகளில் இந்திமொழி நுழைவது ஒருபுறம் என்னை ஈர்க்க, தொடர்வண்டித் துறை நிலைய இந்திமொழி நுழைவாயிலே என்னைப் பெரிதும் தற்போது ஈர்க்கின்றது. அதன் கரணியம் நான் தொடர் வண்டியில் நாள்தோறும் போக்குவரத்துள்ளவன் என்பதே.

மாணவர்களால் கரிப்பூச்சு நடத்தி ஒழிக்கப்பெற்ற இந்திமொழிப் பெயர்ப் பலகைகள், மீண்டும் தொடர்வண்டி நிலையங்களில் மெல்ல மெல்ல இடம் பெற்றுக்கொண்டு வருகின்றன. இதுபற்றி யாருக்கும் விழிப்புணர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை. மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கி மெல்லமெல்ல அடிமேல் அடிவைத்து இந்தி மொழி வருவதைப் பார்க்கும்போது, நாம் யாரும் விழித்துக்கொள்ளவில்லை என்பது அவர்களின் எண்ணம் போலும் என்று நினைக்கத் தோன்றுகிறது. பெரம்பூர், வில்லிவாக்கம், கொரட்டூர், அம்பத்தூர், ஆவடி, பட்டாபிராம், திருநின்றவூர், திருவள்ளூர், திருவாலங்காடு, மோசூர், அரக்கோணம் இவ்வாருக அனைத்து நிலையங்களிலும் இந்திப் பெயர்ப்பலகைகள் இடம் பெற்றுவிட்டன. பேசின் பாலமும், சென்னை நடுவண நிலையமும் மட்டுமே மீதம். தமிழ்நாட்டின் தலைநகரை நோக்கி விரைந்து ஓசைப்படாது வருகின்ற நிலையைக் காண்கிற நாம், இது பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டியவர்களாகிறோம்,

[தொடர்ச்சி 8–ஆம் பக்கம்.]

" கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை " எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

தென்மொழி

இலக்கிய இதழ்

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

சுவடி: 12, ஓலை: 6.

மீனம்.-மேழம்.- தி. பி. ௨௦௦௬ -(மே.-'1975.)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

தாறுமாறான தமிழியக்கங்கள் 2

பொதுவாக நம்மிடையே காணப்பெறும் இயக்கவெழுச்சிகளில் கருத்துவேறுபாடுகளால் தோன்றும் கிளை நெகிழ்ச்சிகளையும், உதிரி நிலைகளையும் முன்னர் கண்டோம். இனி, அவற்றையடுத்துப்பொருள் நசையால் திரிபுறும் மனவேறுபாடுகளையும், அவற்றால் தோன்றும்

இயக்கப் பிதுக்கங்களையும் இங்குக் காண்போம். இவ்வுலகத்தில் தோன்றும் உயிரெழுச்சிகளே பொருள் நசையால்தான் எற்படுகின்றன என்பதை முதற்கண் நாம் அறிதல் வேண்டும். பொருள் நசையில்லாத உயிர்க்கூறுகள் மலர்ச்சியுறுவதே இல்லை. பிறக்கின்ற எல்லா உயிர்களும் பொருளாசை கொண்டே இயங்குகின்றன. இன்னும் சொன்னால் பொருளாசையில்லாத உயிர்கள் பிறவிக்கே வருவதில்லை. "பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை" என்னும் குறள் கூற்றில், உயிரெழுச்சிக்குப் பொருள் நசையே அடிப்படை என்னும் உண்மையே சொல்லப் பெறுகின்றது. எனவே பொருள் நசையின்றி ஒருயிரும் இயங்குவதில்லை. இனி, உயிரினத்துள் மாந்தவுயிரே தலையாய அறிவியக்கக் கூறுபாடுகளைக் கொண்டதாகலின், மாந்தப் பிறவியிலும் அப் பொருள் நசை அறிவெழுச்சிக் கூறுபாடுகளின் மேனிலை இயக்கச் சிறப்புகளைக் கொண்டதாக இருக்கும். அஃதாவது கீழ்நிலை உயிரான ஒரு விலங்கு, பொருள் நசை நாட்டமே கொண்டு இயங்குமெனில், அதனின்றும் விளங்கித் தோன்றிய ஒரு மாந்தவுயிர்க்கு, அப்பொருள் நாட்டம் அதற்குரிய அறிவு வளர்ச்சிப் படிநிலைகளின் பாற்பட்டே இருக்கும். இனி மாந்த உயிர்களுள்ளும் மிக விளங்கித் தோன்றிய சில உயிர்கள், அதற்கேற்ப மிகவுயர்ந்த அறிவுச் சார்பான இயக்கத்துடனேயே இயங்கும். இனி, அவற்றுள்ளும் பிறவியக்கக் கூறுகள் மிகச்சார்ந்த பொதுநல உணர்வுள்ள மாந்த உயிர்களோ, பொருள் நசையில் முற்றும் அப் பொதுவுணர்வினையே அடியொட்டி இயங்கும். இவ்வுண்மையை இன்னும் விளங்கக் கூறினாலொழிய, விளங்கிக் கொள்ளுதல் இயலாது. அதனைப் பருப்பொருளளவின் ஓர் உண்மையால் விளக்குவோம்.

தனிப்பட்ட மாந்தன் ஒருவன் தன் முழுநிலை வாழ்வுக்கு ஓரளவு பொருள் தேவை என்பதை உணர்வதாக வைத்துக்கொள்வோம். அவன் தன் ஆசைக் கேற்பத் தானும் தன் சுற்றமும் வாழ ஒரு விளைநிலமும், ஒரு வள மனையும், இயங்கிகளும், உடல் நலந்தரும் உயர்ந்த உணவு வகைகளும், உயரிய ஆடைகளும் தேவை என்று விரும்பி, அவற்றைப் பெறுகின்ற நோக்கத்தையே தன் வாழ்வின் இலக்காகக் கொண்டு, இயங்குவதாகக் கருதிக்கொள்வோம். இவ்வகையில் அவன் கொண்ட அறிவு நிலைகள், அவன் தன் சுற்றத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதிலும், தன் தேவைக்கேற்ற விளைவைத் தருகின்ற விளைநிலத்தை வாங்குவதிலும், உருவாக்குவதிலும், தன் வாழ்வு நுகர்ச்சிக்கேற்ற வளமனையை அமைப்பதிலும், இயங்கிகள் வாங்குவதிலும், ஊட்டமிக்க உணவு வகைகளிலும், கவர்ச்சி மிக்க ஆடைகளைத் தேர்ந்தெடுப்பதிலும் இயங்கும். ஆனால் பொதுவுணர்வுச் சார்பியக்கம் மிக விளங்கித் தோன்றும் ஒரு மாந்தனுக்கிருக்கும் பொருள் நசை, இவற்றுக்கு நேர்மாறாக இருக்கும். அவ்வாறான ஒருவனின் பொருள் நசையின் அடிப்படை நோக்கமே மிக வேறுபட்டு விளங்கும். தன்னலவுணர்வு மிக்க ஒருவன் தன் சுற்றத்தின் நலன்களைக் கருத்தில் கொள்வானானால், பொதுவுணர்வு மிக்க இவனோ தன்னின மக்களையும், பிறவினை மாந்தரையுமே தன் சுற்றமாகக் கருதுகின்றான். எனவே இவன் அவர்களின் அனைத்து நலன்களையுமே தன் வாழ்வு நோக்கமாகக் கொள்கின்றான். தனிநிலை மாந்தன் தானும்

தன் உறவினரும் போகவும் வரவும் ஓர் இயங்கி தேவைப்படுவதாக உணர்வான் என்றால், பொதுவுணர்வு மாந்தன், தன் இன மக்களை யும் உலக மக்களையும் அவர் வாழும் இடங்களையும் அண்டவும் அணுகவும். தன் போக்குவரத்துக்குக் கருவியாக ஓர் இயங்கி தேவையென்பதாக உணரலாம். எனவே இவனின் பொருள்நோக்கம் அவனின் பொருள் நோக்கத்தினின்று விரிவுள்ளதாகவும் அறிவின் வழிப்பட்டு அமைந்ததாகவும் காணப்பெறுகின்றது. தன்னலவுணர்வு உள்ளவன் தன் பொருட்டுத் தான் வாழ எண்ணுவான் எனில், பொதுவுணர்வுள்ளவன் பிறர் பொருட்டுத் தான் வாழ எண்ணு கிறான்- தன்னலவுணர்வுள்ளவன் பொருள் நசை அனைத்திலும் தான் முதல் என்னும் எண்ணமே தலைதூக்கி நிற்கும். பொதுநல வுணர்வுள்ளவனின் பொருள் நாட்டத்திலோ பிறர் முதல் என்னும் எண்ணமே தலையெடுத்து நிற்கும். இவ்விருவர் நோக்கங்களும் பொதுவாகப் பார்ப்பவர் கண்களுக்கு ஏறத்தாழ ஒன்றுபோலவே தோன்றுமாகையால்தான், தன்னலவுணர்வுள்ளவன் பொதுநல வுணர்வுள்ளவனைப்போல் பேசிக் கொள்ளவும் ஏமாற்றவும் முடிகின் றது. அதேபோல் பொதுநல வுணர்வுள்ளவனையும் தன்னல வுணர் வுள்ளவனோ என்று ஐயுறவும், பழி கூறவும் நேர்கின்றது. ஆனால் இயற்கை இந்நிலைகளையே ஒரு தேர்வுமுறையாக வைத்துப், பின் பற்றத் தக்க ஒருவனின் தகுதி நிலைகளைப் பிறர் கண்டுகொள்ள வாய்ப்பளிக்கின்றது.

தன்னலவுணர்வுள்ளவன் பொதுநிலையாளன்போல் தன் பொருள் நசைக்கும் கரணியங் காட்டுவானாயினும், பொதுநிலையாளன் பால் கூறப்படும் ஐயுறவுக்கும், பழியுரைகளுக்கும், அவற்றால் வரும் கைநெகிழ்வுகளுக்கும் துன்பங்களுக்கும் ஈடுகொடுக்க வியலாதவ னாக இருப்பான். ஏனெனில் அவன் நோக்கம் முற்றும் தானும் தன் சுற்றமும் நலமாக வாழ்வதன் பொருட்டாகவே அமைந்து கிடக்கும். ஆகலின், பொதுநிலையாளனுக்கு வரும் துன்ப நிலைகளில் சிறு அள வினையும் தாங்கவியலாது, தன் போலி ஈடுபாடுகளினின்றும் விரைந்து தன்னை விடுவித்துக் கொள்கின்றான். அவ்வாறு விடுவித் துக் கொள்கையில், தான் இதுவரையிலும் பொது நிலையாளன் போல் பிறர் மதிக்க நடந்துகொண்ட நிலைகளில், பிறர் ஐயுறவு கொள்ளாதவாறும் பழி காணாதவாறும், ஏதோ சில பொய்யுரைகளை யும், புரை நிகழ்ச்சிகளையும் தன் விடுபாட்டுக்குக் கரணியங்களாகக் காட்டிப், பொதுநிலைக் காலத்துத் தன்னைச்சார்ந்து நின்றார் பால் தொடர்ந்து ஈடுபாடு வேண்டி, மிகத் தந்திரமாகவும் கரவாகவும் நடந்துகொண்டு, மறைமுகமாகத் தன் தனி நலத்திற்காகவும் தன் சுற்றத்தின் நலத்திற்காகவும் உழைக்கின்றான். அவனின் முன்னைய இடைக்கால நடத்தைகள் சிலவற்றால் உவப்புற்ற ஒரு சிலரைத் தன் உழைப்புக்கு உரமாக்கியும் கொள்கின்றான். இந்நிலைகளில் தன்னல வுணர்வுள்ளவனையும், பொதுநல வுணர்வுள்ளவனையும் ஓரளவு இனங்கண்டு கொள்ளும் மக்கள், பொதுவுணர்வாளன்போல் நடிக் கின்ற தன்னல வுணர்வாளனைக் கண்டு கொள்வதில்தான் மிகவும் குழப்பமும் மயக்கமும் கொள்ள வேண்டியவர்களாக ஆகின்றார்கள். இனி, இந்தக் குழப்ப நிலையினையும் மயக்கவுரைகளையும் கூட தனக்

குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ள தன்னலவுணர்வாளன் தயங்குவதில்லை. இந்த நிலைகளினின்று மக்கள் தங்களைத் தேற்றிக் கொள்வது மிகவும் கடினம். எனவேதான் பொதுநல வியக்கங் களில் காணப்பெறும் பற்பல சிதைவுகள் எளிதாகவே வேறு சில கிளை யியக்கங்களாக உருப்பெற்று வருகின்றன,

ஓரியக்கத்திற்குப் பொருள் வருவாய் மிக்குளதாயின், பொருள் நசை கொண்ட அவ்வியக்கச் சார்பினன் ஒருவன், அத்தகு வருவாயை விரும்பி, அதுபோல் ஓரியக்கத்தை உருவாக்கினுல் என்ன என்று தொடக்கத்தில் எண்ணுகின்ருன்' எனவே தானும் அவ்வியக் கத்தின் பொது நோக்கங்களுக்குப் பொருந்தியவன் என்று பலரிட மும் பேசுகின்ருன். அப்பேச்சுகளால் எவரெவர் தனக்குச் சார்பானவர்கள் என்பதையும் தெரிந்து கொள்கின்ருன். அவர்களை நெருக்க மாக்கிக்கொண்டு, இயக்கத்தின் பொருள் நிலைகளில் ஐயுறவு ஏற் படுத்துகின்ருன். வருகின்ற வரவு தவருகப் பயன்படுத்தப் பெறுகின் றது என்ரே, வரவேண்டிய பொருள்களுக்கு மிகுவாகக் கட்டுப் பாடுகள் செய்யப் பெறுகின்றன என்ரே, தனக்குச் சார்பானவர் களிடம் இட்டுக்கட்டி யுரைக்கின்ருன். அதைக்கேட்டு அங்காக்கும் பொருள் நசையுள்ளவர்களிடம் அதுபோல் தாமும் ஓரியக்கம் தொடங்குவது பற்றி விரிவாக ஆய்ந்து, முடிவில் தாய் இயக்கத்தை இரண்டாக உடைக்கின்ருன்.

இவ்வகையில் பொதுமக்கள் ஒருண்மையைக் கண்டு தெளிந்து தேர்தல் வேண்டும். பொதுவுணர்வு சான்றவர்களாக நாம் கருதத் தக்கவர்கள், தாம் பெறுகின்ற பொருள் நிலைகளை எவ்வாறு செல விடுகின்றனர் என்பதைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். அவை தனி நிலைப்பட்ட ஒருவனின், அல்லது ஒரு குடும்பத்தின் நலத்திற்காகச் செலவிடப் பெறுகின்றனவா, அன்றிப் பொதுநோக்கோடு செலவிடப் பெறுகின்றனவா என்பதை நன்கு ஆராய்ந்து அறிதல்வேண்டும். தன் தனி வாழ்வியல் ஊட்டங்களை மட்டும் கருத்தில்கொண்டு பொது நலம் பேசும் ஒருவன், எதிர்கால நிலையில், எவ்வகையிலும் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் நிலைப்படுத்திக் கொள்ளவே நினைப்பான். அவன் செயல்கள் ஒவ்வொன்றும், அந்நிலைப்பை அடியொட்டியே இயங்கும். தன் தனிப்பட்ட ஈட்டத்திலேயே அவன் அவ்வாறு செய்வ தாகத் தன்னைச் சரிகாட்டியும் அவன் பேசுவான்- எனவே தன் தனி நிலை நாட்டங்களுக்கு நயன்மை காட்டியுரைப்பதில் அவன் அறிவு வல்லமையை நன்கு பயன்படுத்துவான். அதனுல் அவன் பேச்சுகளின் பெரும்பகுதி பிறரைப் பற்றியதாகவே இருக்கும். பிறரின் இயக்கங் கள் நேர்மையாக இல்லை என்பதையே அடிக்கடி சுட்டுவான். அப் பேச்சினுல் தன்பால் வருபவர்களின் நோக்கத்தையும் எண்ணத்தை யும் பிறர்பால் திருப்புவதிலும், அவர்களின் பார்வையைத் தன் நிலைப்போக்கில் திரும்பவொட்டாமல் தடுப்பதிலுமே மிக்க கவனம் செலுத்துவான். எனவே அவன் தன்னுடன் யாரையும் உற வாடவிடாமல் மிகக் கவனமாக இருப்பான். தன் வீட்டில் உண்டு உறையுள் கொள்ள அவன் எவருக்கும் வாய்ப்புக்கொடான். அவ் வாறு கொடுத்தால் பிறர் தன்னின் உள்முக நாட்டங்களைக் கண்டு

கொள்ளவேண்டி வருமே என்று அவன் மிகவும் அளவிட்ட நிலையில் இயங்குவான். அவ்வாறு பிறர் செய்வதை 'ஊதாரி'த்தனம் என்றும், 'தவறு' என்றும் கூறுமுகத்தான், தன் ஒதுக்கத்திற்கு நயன்மை கற்பிப்பான். தன்னைக் கூர்மையாக நோக்கும் பிறரைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது. தன்னை உட்படுத்திச் செய்யப்பெறும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதிலும் அவனுக்கு விருப்பமிராது. மேடையில் ஏறி நின்று மக்கள்முன் வெளிப்படவே அவன் விருப்பங் கொள்ளான். அவ்விருப்பமின்மையை வெளியே காட்டிக்கொள்ளாம விருப்பதுடன்; அந்நிலையால் தனக்குப் பழி மேவாதிருக்கும் பொருட்டு அப்பொது நிகழ்ச்சிகளையே பலவாறு குறைகூறித் தன் விலக்கீட்டிற்குப் பெருமை சாற்றுவான். எனவே தன்னலவுணர்வுள்ளவனின் தனி நிலைப் பொருள் நாட்டத்தை எவரும் எளிதில் காண முடியாமல், அவன் இயக்கத்திற்கும் சிலர் வலிமை கூட்டுவது தவிர்க்கமுடியாமற் போகின்றது.

இனி, இன்னும் சில போலி நிலையாளர்கள் மேற்சொன்ன நடைமுறைகளுக்கு மாறுகவே இருப்பர். அவர்கள் ஆரவாரமாகப் பேசுவர். தம் அறிவு நிலைகளுக்கு மேலான பேச்சுகளையும் எவ்விடத்தும் வாயவிழ்த்துத் தம் தகுதி நிலையினை உறுதிப்படுத்த முயல்வர். தாம் பிறரைப் போலன்றி மிக விரைந்து தம் இயக்க நோக்கத்தை நிறைவேற்ற முடியுமென்றும், ஆனுல் தமக்கும் சிலர் உதவ முன்வர வேண்டும் என்றும் பலவாறு வாய்வலிமை காட்டித் தம் பொருள் நாட்டத்தைத் தீர்த்துக்கொள்ள முயல்வர். இத்தகையவர்களே ஓர் இயக்கச் சிதைவை மிக விரைந்து தோற்றுவிக்கின்றனர்.

இனி, இயக்கச் சிதைவிற்கு முதற் கரணியமாகிய கருத்துவேறுபாடு ஓரளவு அறிவுணர்வின் பாற் பட்டதாக இருக்க, இவ் விரண்டாவது கரணியமாகிய பொருள் நசை ஓரளவு அன்பின்பாற் பட்டதாகவே இருக்கும். தன்னலவுணர்வாளன் ஒருவனுக்கு முதற்கண் தன்மேலேயே மிகுந்த அன்பிருக்கும். அவன் தன்னையே மிகவும் காதலித்து ஒழுகுவான். தன் வாழ்வே அவனுக்கு நிறைவளிக்கக் கூடியதாக விருக்கும். தன்னையன்றிப் பிறர் வாழ்வு அவனுக்கு நிறைவளிக்கக் கூடியதாக இராது. பிறர் அனைவரும் சரியானவர் அல்லர் என்றும், தான் ஒருவனே மிகச் சரியானவன் என்றும் கருதுகின்ற போலி அறிவுநிலையும், குருட்டு அன்பு நிலையும் அவனைப் பற்றியிருக்கும். பிறருக்காகத் தன்னை இழந்து கொள்ள அவன் ஒருபோதும் விரும்பான். பிறருக்காக ஒரு காசையும் செலவிட அவன் ஒருபோதும் ஒருப்படான். ஒரோவொருகால் செலவழிக்க நேரினும், அதையே தன் பொதுமை உணர்வுக்குச் சான்ருகக் கருதியும் பேசியும் பெருமைப்பட்டுக் கொள்வான். பொதுநிலையில் அவன் துன்பப்படுவதை அவன் ஒருபோதும் விரும்புவதில்லை. தன்னை விரும்புபவர்களையே அவனும் விரும்புவான். அவர்களையே அவன் உறவாக்கிக் கொள்வான். தன் குடும்பம், சுற்றம் இவர்களுக்காகவே தன் நிலையை அவன் உயர்த்திக் கொள்ள விரும்புவான். தன் மனைவி மக்கள் நலத்தையே அவன் உள்நோக்கமாகக் கொண்டு ஒழுகுவான். அதனையே சிறந்த இல்லறவொழுக்கம் என்று பிறர் நம்பும்படி பெருமை பேசுவான்.

தான் அன்பில் சிறந்தவன் என்றும், பிறர் அன்பில் குறைந்தவர் என்றும் நிறையிட்டுப் பேசுவான். பொதுவுணர்வுள்ளவனின் விருப்பு வெறுப்பற்ற தன்மையைத் தனக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டு, அவனை உண்மையான அன்பில்லாதவன் என்று குறை கூறிப் பழிப்பான். இந்நிலைகளை ஒருவன் தெளிவாக அறிந்து தேர்வது மிகவும் கடினம் என்பதை அனைவரும் முதற்கண் உணர்ந்து கொள்ளு தல் வேண்டும். உண்மைக்கு மாறான பொய்ம்மை நிலை, வெள்ளைக்கு மாறான கருப்பு நிறம்போல் எளிதே புலப்படுவதாகும். ஆனால் உண்மையைப் போலும் உள்ள பொய்ம்மை நிலை, ஆவின் பாலும் கள்ளிப்பாலும் போல் எளிதே புலப்படாததாகும். நெடுங்காலப் பழக்கத்தாலும் பயன் விளைவாலுமே உண்மை நிலைகளை ஒருவன் நன்கு உணர்ந்து கொள்ளல் இயலும். இருபடித்தானும் ஈடுபடும் இணைவு நிலைகளும், காலம் அறிவிக்கும் வரை காத்திருக்கும் பொறுமை நிலைகளும், உண்மையையும், போலியையும் எடையிடு வார்க்கு மிகவும் இன்றியமையாத பண்புகளாம். இவை அனைவர்க்கும் சமநிலையில் அமைந்திராவாகையாலும், உண்மைக்கும் போலிக்கும் மிகுவேற்றுமை இன்மையாலும், உலகில் பலவகையான இயக்கச் சிதைவுகள் நேர்ந்தபடியே இருக்கின்றன. அவ்வந் நிலைகளில் ஏற்படும் இயக்கச் சிதைவுகளை அவ்வச் சிதைவுகளுக்குட்பட்டார் தம் நடுநிலைக் கண்கொண்டு தேறுகின்ற நிலை என்றும் பொருந்தி விடுவதில்லை. எனவே இயக்கச் சிதைவுக்கான அறுவகைக் கரணியங்களுள் இவ்விரண்டாவது கரணியமாகிய பொருள்நசையே பெருவகையான இயக்கச் சிதைவுகளுக்கும், அடிநிலையாக இருந்து, எளிதில் கண்டுணரமுடியாத முடிநிலையாகவும் இருக்கின்றது. ஏனெனில் பொருள் நாட்டமில்லா ஒரு சிறு இயக்கத்தினையும் உலகில் காண வியலாது. தனிநல வுணர்வுள்ளவனுக்குள்ள பொருள்நாட்டம் போலவே பொதுநல வுணர்வுள்ளவனுக்கும் பொருள் நாட்டம் இருக்கும். ஆனால் முன்னவன் நடுவூரில் பழுக்கும் நச்சுமரம் போன்றவன்; பின்னவன் ஊர்ப்புறத்தே தோண்டிய ஊருணியைப் போன்றவன் என்பதைக் காலத்தேதான் அறியமுடியும். அதுவுமன்றி முன்னவனுக்குப் பொருள் வழிபடு கருவியாக விளங்குகின்றது; பின்னவனுக்கு அது வினைபடு கருவியாக அமைகின்றது. இந்த நுண்ணிய வேறுபாடுகளை மக்கள் கண்டு தெளிவது ஓரளவு அறிவின்பாற் பட்டதாகலின், அது மிக அரிதாகவும் ஆகிறது.

எனவே, ஓரியக்கத்துள் எதிர்பாரா வகையில் உருவாகும் பொருள் நிலை வேறுபாடுகளைக் கண்டுகொள்ளும் பொழுது, உண்மையிலேயே அப்படிக் கண்டவர்கள் பொதுநில உணர்வுள்ளவர்களாயின், ஏற்கனவே உள்ள அந்த இயக்கப்பொருள் பொதுப் பொருளாகையால், அதனை மேலும் கட்டிக்காக்கவே விரும்பி, அவ்வியக்கத்திலேயே தம்மை மேலும் நிலைப்படுத்திக் கொள்ள முயல்வார்களேயன்றி, அதன் பொருட்டுத் தாம் இன்னோர் இயக்கத்தை உருவாக்க விரும்பமாட்டார்கள். அவ்வாறின்றித் தாமும் வேறோர் இயக்கத்தை உருவாக்க விரும்புவார்களாயின், அவர்களைப் பொருள்நசை உள்ளவர்களாகவே நாம் கருதிக்கொள்ளல் வேண்டும். ஓரியக்கத்தை உருவாக்குகின்ற தகுதிநிலைகளுள், தாம் பொருள்நசையின்றி

இருப்பதனோடு மட்டும் அமையாது, பிறர் அவ்வாறு பொருள் நசை கொண்டு இயங்குவதைத் தடுப்பதும் ஒரு மேம்பட்ட தகுதியாகும் என்று எண்ணிக்கொள்க. பிறரின் பொருளாசையைக் கண்டிக்க இயலாதவன், தன் உள்ளத்துள் எழும் பொருளாசையையும் கண்டிக்கத் தகுதியற்றவனாகப் போகின்றான். அப்படிப்பட்டவன் இன்னோர் இயக்கத்தை எவ்வகையானும் வெற்றியுடன் இயக்குதல் இயலாது என்க. —(தொடரும்)

'தென்மொழித்' தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
19 ஈ ஆ (வகுப்பு) 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம்: சென்னை-5.
2. கால முறை; திங்கள் ஒருமுறை.
3. அச்சிடுவோர் பெயர்: திருவாட்டி. மா. தாமரை.
   இனம்: தமிழர்.
   முகவரி: தென்மொழி அச்சகம், சென்னை-5.
4. வெளியிடுவோர் பெயர்: திரு. பெருஞ்சித்திரன்.
   இனம்: தமிழர்.
   முகவரி. தென்மொழி அச்சகம், சென்னை-5.
5. ஆசிரியர் பெயர், முகவரி: திரு. பெருஞ்சித்திரன்; சென்னை-5.
6. ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர்தம் பெயர்களும், முகவரிகளும். } திரு. பெருஞ்சித்திரன், சென்னை-5.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

1—3—75
சென்னை-5.

—பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்.)

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆகவே, இதுபற்றி மக்களிடையே விழிப்பு உணர்ச்சியைத் தூண்டுவதன் பொருட்டுத் தென்மொழியில் ஒரு கட்டுரையோ, இதழ் உரையோ வெளியிடுமாறு வேண்டுகிறேன். மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒரு சிறு நிகழ்ச்சி என்றாலும், இவ்வாறு அமைகின்ற இதுவே மக்களின் அடிமைத் தனத்திற்கும், அடக்கி ஆள நினைப்பவர்களின் மேலாண்மை நினைப்புக்கும் அடிப்படையாகும் என்பது தாங்கள் அறிந்ததே. இத்திமொழிப் பெயர்ப்பலகை குறித்துத் தங்களது கட்டுரை விரைந்து வெளிவருவதை எதிர்பார்க்கிறேன்.

—சண்முக. முருகானந்தம், க.இ.; சென்னை-82.



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : கக

தோட்குரி யோயே! தோட்குரி யோயே!
கேட்கு நந் தொலைவிற் கிடந்துநீர் வடிய
நாட்குநா ளிளைக்குந் தோட்குரி யோயே!
முன்மழை சிதர்ந்து பின்னிலா காயும்
மென்னடை யிரவின் எதிர்நா ளெண்ணி
நோன்றரு பிரிவிற் றுன்றனிப் புலம்புநள்
ஆன்ற தெருவின் அதிர்சிலை மடுத்தே
ஒய்வறக் குரைக்கும் ஒருதனிக் குக்கல்
பாய்ந்தின் வருகை தடுக்குமென் றஞ்சி
எழலும் விழலு மாகி
உழலும் மெய்யோ டொருத்தியீங் குண்டே!

பொழிப்பு :

தோளுக் குரியவனே! தோளுக் குரியவனே! அழைப்பொலி கேட்பதற்கு இயலாத நெடுந்தொலைவில் (இல்லத்தே படுக்கையில் தூக்கமற்றுக்) கிடந்து, (நின் பிரிவுத் துயரால்) கண்களில் நீர் வடியும்படி (வாடி) நாளுக்கு நாள் இளைத்துப் போகின்ற (நின் தலைவியின்) தோளுக்கு உரியவனே! முன்யாமத்துப் பெய்த மழை தூறியடங்கிப் பின் யாமத்தில் நிலா காய்ந்து வீசும், மெதுவாக நடையிடுகின்ற இரவுக்கு அடுத்துவரும் நாளைக் கணக்கு வைத்து எண்ணியவாறு, கற்பு நோன்புடன் தாங்குதற்கரிய பிரிவில், தனக்குத் தானே பேசிப் புலம்புகின்றவள், நெடிதகன்ற தெருவில் அலைந்து வரும் எதிரொலியைக் காதுகளில் வாங்கியவளாய், ஓய்வில்லாமல் குரைக்கின்ற தனித்த ஓர் ஒற்றைக் குள்ள நாய், (ஒருவேளை, முன்னறிவியாமல் வருகின்ற) உன் இனிய வருகையைத் தடுத்துவிடுமோ என்று அஞ்சி, எழுந்து வந்து வாயிலைப்பார்ப்பதும், வாராமை கண்டு உளச்சோர்வுடன் மீண்டும் படுக்கையில் வீழ்வதுமாகிய, உழல்கின்ற உடம்புடன் ஒருத்தி, இங்கு உள்ளாள்.

விரிப்பு :

இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது,

தலைவனின் ஓதற் பிரிவால் உழன்ற தலைவியின் துயரைத் தோழி தலைவற் குணர்த்தியது.

திருமணத்தின் பின், கற்புக் காலத்து, கல்வியின் பொருட்டுப் பிரிந்து சென்ற தலைவனை நாளும் எதிர்நோக்கிய தலைவியின் துய

ரத்தை அவன் உணருமாறு, தோழி, ஒரு மடல்வழிப் புலப்படுத்திய தாகும், இப்பாடல் என்க.

"தோளுக்குரியவனே! தோளுக்குரியவனே! கேட்பதற்கு அரிய நெடிய தொலைவில் இருந்து, நாளுக்கு நாள் இளைத்துப் போகின்ற தலைவியின் தோளுக் குரியவனே! முன் யாமத்துப் பொழிந்த மழை நின்று, பின் யாமத்துக் காய்கின்ற நிலாவொளி நிரம்பிய இரவில், அவள் வழக்கம்போல் உன் வரவை எண்ணி எதிர்பார்த்துக் கிடக் கின்றாள்; அக்கால் எங்கோ ஓர் ஒற்றை நாய் குரைக்கும் எதிரொலி அவள் செவிகளில் எட்டுகின்றது. அக்கால் ஒருவேளை, நீ வருவதா யிருப்பின் அவ் வரவை அந்த நாய் தடுத்து விடுமோ என்று அஞ்சி, எழுந்து ஓடுவதும், பின் வாராதது கண்டு மீண்டும் வந்து படுப்பது மாகிய வெற்றுடம்புடன் இங்கொருத்தி உள்ளாள் என்பதை நினை விற்கொள்"—என்று தோழி, தன் தலைவியின் நிலையை ஒரு மடல் வழித் தலைவனுக்கு அறிவிக்கின்றாள் என்க.

தோட்குரியோயே !—தோளுக்குரியவனே !—தோளுக்குரியவன் என்றதால் திருமணம் செய்த உரிமை புலப்பட்டது. இருமுறை அடுக்கியதால் நினைவூட்டுதலாகவும் அமைந்து, இரக்கக் குறிப்பும் புலப்பட்டது. ஏற்கனவே ஒருத்திக் குரியவன் என்னும் உரிமை சாற்றியதால், பிறர்க்குரிமை மறுக்கப்பெற்றது என்க.

தலைவியின் அனைத்து உறுப்புகளுக்கும் உரியவனான தலைவனை, தோளுக்கு மட்டும் உரியவனாகச் சிறப்பித்துக் கூறியது என் னெனின், அது தழுவலுக்குரியதாகலின் என்க. மேலும் தலைவனின் பிரிவால் மெலிவுறும் தலைவியின் பிற உறுப்புகள் யாவினும் தோளே மிகவும் மெலிந்து தோன்றி அழகு குன்றிப்போவதாலும் என்க.

கேட்கருந் தொலைவு : பேசுகின்ற ஒலி கேட்பதற்கு அருமை யான தொலைவு.

தலைவியின் தனித்துப் புலம்புகின்ற ஒலியை நாங்கள் நாள் தொறும் கேட்கும்படி அருகிலிருக்கின்றோம். நீயோ அதைக் கேட்க வியலாதவாறு சேய்மையிலிருக்கின்றாய் என்று குறிப்புணர்த்தினாள் என்க. இதனால் அவள் துயர் நன்கு உணர்த்தப்பெற்றது.

கிடந்து — படுக்கையில் துயிலின்றி வெறுமனே படுத்திருந்து.

நீர் வடிய — கண்ணீர் வழியும்படி நனைந்திருக்கும் தோள்.

நாட்கு நாள் இளைக்கும் தோள் : நாளுக்கு நாள் இளைத்து வரு கின்ற தலைவியினது தோள். பிரிவுத் துயரால் ஒவ்வொரு நாளும் வருந்திக் கிடக்கின்றமையின், தோளின் அழகும் வலிவும் கெட்டு இளைத்தது என்றாள். நாளுக்கு நாள் என்றதால் முன்னைய நாளினும் அடுத்த நாள் மேலும் இளைத்தது கூறப்பெற்றது.

இனி, தோட்குரியோயே என்று மூன்றும் முறை அடுக்கியது, அவ்வாறு இளைத்துப் போகின்ற தன்மைக்கு நீ இரங்குதல் வேண் டும் என்று குறித்தது.

முன்மழை....காயும்: முன் யாமத்து மழை பொழிந்து பின் யாமத்து நிலவொளி காய்கின்ற இரவு.

முன் யாமத்துப் பெய்த மழையால் நிலமும் காற்றும் குளிர்ச்சி யடைந்திருப்பினும், பின் யாமத்தின் நிலவொளி அவளுக்கு வெப் பத்தைத் தருகின்றது. அந்த நிலைக்குப் பிரிவுத் துயரால் அவள் வாடுகின்றாள் என்றபடி.

மென்னடை இரவு: மெதுவாகக் கழிகின்ற இரவு.

முன் யாமத்து மழை பெய்வதும், பின் யாமத்து நிலவு காய் வதும் போலும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் தலைவி தூங்காமலிருந்து காணுவதால் அவளுக்கு அவ்விரவு மெதுவாகக் கழிகின்றதுபோல் தோன்றுகின்றது. விரைந்து போகாத தன்மையால் நடக்கின்ற இரவு என்றாள்.

எதிர்நாள் எண்ணி: இரவுக்குப் பின் வருகின்ற பகலுடன் தலைவன் தன்னைப் பிரிந்து சென்ற நாளைக் கணக்கிட்டு எண்ணிப் பார்த்தவளாய்.

நோன்றரு பிரிவு: தாங்குதற்கரிய பிரிவு. இல்லிருத்தல் முல்லை என்றதால் நோன்பு என்பதைக் கற்பு நோன்பாகக் கொண்டு, அந் நோன்புடன் கூடிய அரிய பிரிவு என்றும் பொருள் கொள்க.

தான்தனிப் புலம்புநள்: தான் ஒருத்தியாகவே தனித்துப் புலம்புதல். புலம்புதல்—தனியாகப் பேசிக்கொள்ளுதல், நாள் எண்ணுதல், வராமை குறித்து வருந்துதல் போலும் புலம்பல்.

ஆன்ற தெரு: அகன்ற தெரு. அகன்றிருப்பதால் நீண்டும் இருத்தல் வேண்டும் என்க.

அதிர் சிலை மடுத்து: அதிர்ந்து வரும் எதிரொலியைக்கேட்டு.

இரவில் எங்கோ தெருக்கோடியில் குரைக்கின்ற நாயின் ஒலி, நெடிதகன்ற தெருவாகலின், எதிரொலித்துக் கேட்கின்றது. இனி, மடுத்து என்றதால் தலைவியே அவ்வொலியைக் கூர்ந்து கேட்டு அறிந்தாள் என்க.

ஒய்வறக்.......குக்கல்: ஓய்வில்லாமல் குரைக்கின்ற தனித்த ஒரு குள்ள நாய். ஒலி வேற்றுமையால் அதைக் குள்ள நாய் என்றும் தனித்த நாய் என்றும் உணர்ந்தாள் என்க.

இனி, தன்போலவே அந்த நாயும் இரவில் ஓய்ந்திராமல் தொடர்ந்து குரைத்துக்கொண்டே யிருப்பதால், அதுவும் துணை யின்றித் தனியாகத்தான் இருத்தல் வேண்டும் என்றும் வரைந்தாள் என்க.

பாய்ந்து இன்வருகை தடுக்கும் என்று அஞ்சி; மேற் பாய்ந்து தலைவனின் இனிய வருகையைத் தடுத்துவிடுமோ என்று அஞ்சிய வளாய்.

ஒவ்வொரு நாளிரவிலும் தலைவி தலைவனின் வரவு நேராதோ என்று எதிர்பார்த்துக் கிடக்கின்றாள். ஒவ்வோர் இரவும் அவன் வந்து விடுவான் என்றே எண்ணுகின்றாள். ஆனால் அந்தக் குறிப்பிட்ட இரவில் தனித்த ஒருநாய் வேறு தொடர்ந்து குரைத்துக் கொண்டுள்ளது. ஒருவேளை, முன்னறிவிப்பின்றித் தன் தலைவன் அன்று வரநேர்ந்தால், அருமையாக நேரும் அவனின் இனிய வருகையையும், அந்த நாய் அவன் மேற்பாய்ந்து தடுத்துவிட்டால் என் செய்வது என்னும் கவலையால் அலமருகின்றாள் தலைவி.

துணையுடன் உள்ள நாயாகவன்றித் தனித்த நாயாகவுள்ளதால் மேலே பாயலாம் என்று அஞ்சுகின்றாள். அவ்வாறு அஞ்சி எழலும் விழலுமாக விருக்கின்றாள்.

எழலும் விழலும் ஆகி: (எதிர்பாராமல் நேருகின்ற தன் தலைவனின் இனிய வரவைத் தொடர்ந்து குரைக்கின்ற அந்த நாய் அவன்மேல் பாய்ந்து தடுத்து விடுமோ என்று அஞ்சியவள்) படுக்கையிலிருந்து எழுந்து வெளியே ஓடிப் பார்ப்பதும், பின் சோர்வுற்று உள்ளே வந்து மீண்டும் படுக்கையில் விழுவதுமாக இருக்கின்றாள் என்க.

எழலும் விழலும்: விரைவுக் குறிப்புடன் கூடிய சொற்கள். எழுதல் விழுதல் இயல்புக் குறிப்பான சொற்கள்.

உழலும் மெய்யோடு: இயங்குகின்ற உடம்புடன்.

தலைவியை உயிரற்ற உடம்பு என்றாள். அவள் உயிர் தலைவனோடு உறைவதால் இங்குள்ளது வெற்றுடம்பே என்றாள். ஆனால் உயிரின்றி இவ்வுடம்பு இயங்குவதால், இயங்குகின்ற உடம்பு என்றாள் என்க! உணர்வின்றி இயக்கிவிட்ட பாவைபோல் தலைவி நடமாடினாள் என்க. மேலும், உடம்பு என்றதால், தலைவனை உயிரென்றும் உணர்த்தி, அவ்வுடம்பொடு வந்து பொருந்துக என்றும் கூறினாள் என்க.

ஒருத்தி ஈங்கு உண்டு. உனக்கென ஒருத்தி இங்கு உள்ளாள் என அறிக. உனக்குரியவளான ஒருத்தி யென்றமையால், உரிமையற்றபிறரை ஒருவேளை எண்ணிக்கொண்டு நீ வாரமற் காலம்கடத்தியிராதே. நின் தலைவி உயிரற்ற உடலாக இங்கு இயங்குகின்றாள். அவளுக்கு நீதான் உயிர்: எனவே நீ அவளை நினைத்து உடனே வரவு கொள் என்னும் குறிப்புணர்த்தினாள் என்க.

ஓதற் பொருட்டு வேற்றூர் சென்றுவதியும் தலைவற்குத் தோழி நேரில் சென்று உணர்த்தல் இயலாதாகையின் மடல்வழிப் போக்கினாள் என்க. இனி, தோழி கூற்றாக வன்றித் தலைவி கூற்றாகப் பொருள் கொளினும் இஃது இயலும் என்க.

இது, முல்லைத் திணையும் பிரிவிடை யழுங்கல் என்னும் துறையும் ஆகும். O

தொடர்: 6.

அன்பர்களைப் பார்த்துவிட்ட மகிழ்ச்சியில், படிக்கட்டுகளின் வழியாக வானூர்தி நிலையத்திற்குள் இறங்கினேன். ஓர் அரைமணி நேரத்தில் ஆயத்துறை ஆய்வும் நடந்தது. சிங்கப்பூரில் ஒரு சட்டம் உண்டு. உலகில் எந்த நாட்டிலிருந்தும் எந்தப் பொருளையும் சிங்கப்பூருக்குக் கொண்டுவரலாம். அஃது ஒரு வரியற்ற நாடு (Free-Port Station). இந்தியாவில் அவ்வாறன்று. வெளிநாடுகளிலிருந்து—எந்த நாட்டிலிருந்தும் எந்தப் பொருளைக்கொண்டு வந்தாலும், அப்பொருள் நூறு உருபா மதிப்புடையதாயின், அதற்கு நூற்றிருபத்தைந்து உருபாக்களை வரியாகச் செலுத்துதல் வேண்டும். எனவேதான் சிங்கப்பூரில் என் பெட்டியையும் பொத்தகக் கட்டுகளையும் எவரும் ஆய்ந்து கொண்டிருக்கவில்லை. என் எல்லைக் கடவை மட்டும் பார்த்துச் சில கேள்விகளை மட்டும் கேட்டுவிட்டு, இயல்பாக நான் சிங்கப்பூரில் பதினான்கு நாட்கள் இருக்கலாம் என்று கூறிவிட்டனர். நான் போவதற்கும் வருவதற்கும் வானூர்திச் சீட்டு வைத்திருந்ததால் எனக்குச் சிங்கப்பூர் நுழைவு இணக்கச்சீட்டு (Visa) தேவைப்படவில்லை.

என் பெட்டியும், இன்றியமையாத பார்வைப் பொத்தகக் கட்டும் எனக்கு முன் ஆயத்துறைக்குக் கொண்டுவரப் பெற்றிருந்தன. எல்லைக்கடவு ஆய்வு முடிந்து, அப்பகுதியினின்று வெளிவந்தவுடன் அன்பர்கள் அனைவரும் என்னுடன் வந்து கலந்துகொண்டனர். அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சிங்கைத் தமிழ் முரசு ஆசிரியர் உயர்திரு. மெ, சிதம்பரனாரும், காரைக்குடி இராமசாமித் தமிழ்க் கல்

லூரியின் நிறுவனரும், சிங்கைத் தமிழ் வாணிகர்களில் பெருமை மிக்கவர்களில் ஒருவரும், சிங்கை வரும் தமிழறிஞர்களை அன்புடன் வரவேற்கும் புரப்பாளர்களில் ஒருவரும் ஆகிய, உயர்திரு. இராம. பெரிய கருப்பனார் அவர்களும், மற்றும் பாவலர்கள், எழுத்தாளர்கள் அலுவலர்கள், ஆசிரியர்கள் முதலியோரும் வந்து சூழ்ந்துகொண்டனர். திரு. முல்லைவாணன் அனைவரையும் அறிமுகம் செய்துவைத்தார். தமிழ் முரசு ஆசிரியர் மாலையணிவித்து வரவேற்றார். அவர் துணைவியாரும், மகனும் உடன் வந்திருந்தனர். நெடுநாளாக, திரு. சிதம்பரம் அவர்கள் தென்மொழித் தொண்டுக்குத்துணையாக நின்றவர்கள். அவர் தூய தமிழ்ப்பற்று என்னை இங்கிருந்த பொழுதே மலைக்கச் செய்துள்ளது. கள்ளங்கவடற்றஅவர்தமிழ்ப் பற்றைப்பற்றி, முல்லைவாணன் ஏற்கனவே பலவாறு எனக்குச் சொல்லியுள்ளார், அங்கு வந்திருந்த அன்பர்கள் அனைவரும் தனித் தனியாகவும், ஒன்றிணைந்தும், பல கோணங்களில்என்னுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



அதன் பின்னர் என்னைப் பெர்னும் தெருவில் உள்ள இரிட்சு விடுதிக்கு (Ritz Hotel) அழைத்துச் சென்றனர். அனைவரும் தனித் தனியாக அங்கு வந்து சேர்ந்தனர். இரவுணக்குப் பின் அன்பர்கள் நெடுநேரம் என்னுடன் பேசிக்கொண்டிருந்தனர். திரு. மெ. சிதம்பரம் அவர்களும், திரு. பெரிய கருப்பனார் அவர்களும் தமிழ்த் தொடர்பாகவும், சமயத் தொடர்பாகவும், தமிழக அரசியல் தொடர்பாகவும் என்பால் பல விளக்கங்களைக் கேட்டனர். திரு. சிதம்பரனார் அவர்கள் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். என் இறைக் கொள்கையை அவர்கள் பலவாறு மறுத்தனர். சைவ சமயக் கொள்கையே உலகில் உள்ள சமயக் கொள்கைகள் யாவற்றினும் தலை சிறந்தது என்று தருக்கமிட்டனர். என் கொள்கையை வேதநெறிக் கொள்கையென்று கூறி, அது சைவக்கொள் முடிபுகளுக்கு மாறானது என்று வலிவாக எடுத்துக் கூறினர். அவர்கள் கூற்றுகளையெல்லாம் அமைதியாகவும் ஆழமாகவும் நான் மறுத்தேன். என் கொள்கை அறிவியல் பொருத்தம் உடையதென்றும், அது வேத

நெறிக் கொள்கையாகாதென்றும் வலியுறுத்திக் கூறினேன். எதிர் காலத்தில் சைவக் கொள்கைகளில் பலவகை மாற்றங்கள் ஏற்படும் என்றும், ஆரியத்தின் கட்டழிப்பால் சைவசமயம் தூய்மை யிழந்தது என்றும், மொழி நிலையில் எவ்வாறு ஆரியம் தமிழ்க் கூறுபாடுகளைச் சிதைத்ததோ, அதேபோல் சமய நிலையிலும் பலவகையான பொருந்தாப் புணைவுகளை உண்டாக்கி விட்டதென்றும் விளக்கிக் கூறினேன். திரு. சிதம்பரனார் இடையிடையே அவரின் சமயக் கொள்கைகள் தாக்கப் பெறுவதற்காக, உணர்வு வயப்பட்டு ஓங்கிய குரலுடன் என்னை மறுத்துப் பேசினாலும், என்மேல் கொண்ட அன்பாலும் மதிப்



பாலும் என் கருத்துகளையும் மிகக் கவனமுடன் கேட்டார். அவர் உணர்வு வயப்பட்டுக் கடுமையாகப் பேசும் பொழுதெல்லாம், திரு. பெரிய கருப்பனார் அவரை அமைதிப் படுத்திக் கருத்துப் போராட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொண்டனர். இறுதியில் ஒருவாறு மன அமைதி பெற்று இருவரும் விடைபெற்றுக்கொண்டனர். இரவு பதினொன்றரை மணிக்கு அனைவரும் அங்கிருந்து நீங்கினர். பன்னிரண்டு மணியளவில் திரு. அன்பரசன் என்னை வந்து பார்த்தார். பல நலன்களையும் பேசியிருந்துவிட்டு இரவு இரண்டு மணியளவில் ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மறுநாள் மாலையில் (11-3-74) தமிழ் முரசுச் செய்தித்தாளில் என் சிங்கை வரவு குறித்துச் செய்தி வெளியாகியிருந்தது. சிதம்பரனார் அச்செய்தியைத் தூய தமிழில் எழுதியிருந்தார். அதில் ஒரு பகுதி இது:

"வேற்றுமொழிச் சொற்களின் கலப்பினால் தமிழ்மொழிக்கு நேர்ந்துள்ள இழப்புகள் எத்தனை என்பதை எடுத்துக் காட்டித் தமிழின் தூய்மையைப் பேணுவதற்குரிய வழி வகைகளை விளக்கி உரை நிகழ்த்துவதற்காகப் பெருஞ்சித்திரனார் அவர்கள் சிங்கப்பூர், மலேசியச் சுற்றுச் செலவு மேற்கொண்டு இங்கு வந்திருக்கிறார்கள். அவர்கள்

சிங்கப்பூரில் பலவிடங்களில் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு மலேசியாவின் பல நகரங்களுக்குச் செல்வார்கள்.

தமிழின் தூய்மையைக் காப்பதற்காக ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களை உறுதுணையாகக் கொண்டு, 'தென்மொழி' என்னும் மாதத் தாளிகையைப் பல்லாண்டுகளாக நடத்தி வருகிற பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழை ஐயந்திரிபு அறக் கற்றவர்கள். கற்றதனோடு அமையாது, தாம் கற்றதை நயம்பட எடுத்துரைப்பதிலும் அவர்கள் வல்லவர்கள். சொற்பொழிவு நிகழ்த்துவதிலும், கேள்வி கேட்பவர்கள் மனநிறைவு பெறத்தக்க வகையில் கேள்விகளுக்கு விடையளிப்பதிலும் அவர்களுக்கு உள்ள ஆற்றல் பெரிதாகும். தமிழகத்தில் கல்லூரிகள் உள்ளிட்ட பல இடங்களுக்கும் சென்று உரை நிகழ்த்துவது அவர்களுக்கு ஓயாத அலுவலாக இருக்கிறது. அவர்களின் உரைகளைக் கேட்டு அறிவு விளக்கம் பெற்ற மாணவர் தொகை பெரிது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் அவர்கள் நிகழ்த்திய உரை தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறுவதற்கு உரிய ஆழமும் அருமையும் வாய்ந்ததாகும். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தனார், தாம் இதற்குமுன் இத்தகைய நுழைபுலமிக்க உரையினைக் கேட்டதில்லை என்று பாராட்டினர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

''மெய்யடிமைச் சங்கத்து மேலோரிடம் இயல்பாகவே அமைந்த எளிமை பாவலரேறு அவர்களிடம் பளிச்சிடுகின்றது. அஃது ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் என்னும் தமிழ் மரபினை எனக்கு நினைவூட்டியது. தமிழ் மொழியும் பண்பாடும் பெறுதற்கரிய கருவூலங்கள் என்னும் திண்ணிய நம்பிக்கை பாவலரேறு அவர்களின் பேச்சில் நன்கு புலனாயிற்று. தாம் உரை நிகழ்த்தப்போகும் கூட்டங்களில் பேராசிரியர்கள் உட்பட அன்பர்கள் யாவரும் எத்தகைய கேள்விகளை வேண்டுமானாலும் கேட்கலாமென்றும், அவையனைத்துக்கும் விரிவாகவும் அவர்கள் மனநிறைவு அடையத்தக்க வகைகளிலும் விடையளிக்கத் தாம் சமைவாய் இருப்பதாகவும் பாவலரேறு அவர்கள் சொன்னார்கள்.

தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கலாம் என்பவர்களும் அது கூடாது என்பதை உணரத்தக்க வகையில் தாம் விளக்கங்கள் தர முடியும் என்பதைப் பாவலரேறு அவர்கள் வலியுறுத்தினார்கள். அவர்களின் பல சொற்பொழிவுகள் குடியரசில் நிகழவிருக்கின்றன. தமிழ்த் துறை பற்றி விளக்கம் பெற விரும்புகிறவர்களுக்கு இஃது அரிய வாய்ப்பாகும். அவர்கள் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.''

அதே செய்தித் தாளின் முன்பக்கத்தில் ஒரு பகுதியில் 'தென்மொழித் தலைவா வா, வா' என்னுந் தலைப்பிட்டு, ''செந்தமிழ்ப் புலவா, திசைபுகழ் மறவா, உன்புகழ் பாட உலகெலாம் வருவாய்'' என்றும், ''அன்பினுக் கிலக்காய், அறிவுக்கு விளக்காய்ப், பைந்தமிழ் வளர்க்கும் பரிதியே வா, வா'' என்றும் பல அடிகளைக்கொண்ட வரவேற்புப் பாடல் ஒன்றினை திரு. சாந்திச் செல்வன் என்பவர் எழுதியிருந்தார்.

—(தொடரும்.)

உடலியல்

உணவைப்பற்றிய சில உண்மைகள்!

உலகெங்கும் உணவுப் பற்றாக்குறை மிகுந்து வருகின்றது. மக்கள் தொகையும் அளவுக்கு மீறிப் பெருகி வருகின்றது. கிழமைக்கு 12 இலக்கம் பேர் மேனி உலகில் பெருகி வருகின்றனர். 1970-இல் உலகின் மக்கள் தொகை 350 கோடியாக இருந்தது. இக்கால் 500 கோடிக்கு மேல் பெருகிவிட்டது. கி. பி. 2000-ஆம் ஆண்டில் இந்நிலவுலகில் ஏறத்தாழ 800 கோடிப் பேர் இருப்பர். அவ்வளவு பேர்களுக்கும் அக்கால் உணவு கிடைப்பது மிகவும் கடினம். பெருகி வரும் மக்கள் தொகையின் தேவை தாங்காமல் மக்கள் நாகரிகமே நசித்துவிடக்கூடும் என்று இறுதியாக மெக்சிகோவில் கூடிய அனைத்துலக உணவு மாநாட்டில் அச்சம் தெரிவிக்கப் பெற்றது. இப்பொழுதே இவ்வுலகின் ஏதோ ஒரு மூலையில் ஒவ்வொரு நிமையத்திலும் ஒருவன் பசியால் துடித்து இறந்து கொண்டிருக்கின்றான். மக்கள் குலத்தின் பண்பாட்டுக்கும் அறிவுக்கும் ஆற்றலுக்கும், இவ்வுணவுப் பற்றாக்குறை பெருத்த ஓர் அழிவையே ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

0 0 0

உணவுப் பற்றாக்குறை ஒருபுறம் இருந்து வருகையில் கிடைக்கின்ற உணவை உண்ணத் தெரியாமலும், பாதுகாக்கத் தெரியாமலும் மக்கள் ஒருபுறம் அதை வீணாக்கி வருவதுடன், பலவகையான நோய்களாலும் துன்புற்று வருகின்றனர். கொஞ்சமாக உணவு உட்கொள்வதே நல்லது—என்னும் பொன்மொழியைப் பெரும்பாலும் அனைவரும் மீறியே வருகின்றனர். 'உணவு சுவையாக உள்ளபொழுதே உணவிலிருந்து எழுந்து விடு' என்பது ஒரு நல்ல பழமொழி. அதிகமாகச் சாப்பிடுவது ஒரு குற்றமாக இருக்க, சாப்பிட்ட உணவுச் சாரத்தை முற்றும் பயன்படுத்திக் கொள்ள முடியாத இயக்கக் குறைவுடன் இருப்பது இன்னொரு குற்றமாக இருக்கிறது! உட்கொள்ளப் பெற்ற உணவுச் சாரத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாமற் போனால் உடம்பு தடித்து விடுகின்றது. எந்தப் பருவத்திலும் எடை கூடுவது உடலுக்குக் கெடுதல் தருவதே. உடல் எடை கூடுவது நல்லதன்று. அத்தகைய உடலின் உழைக்குந் திறன் குறையும். அவ்வுடல்களை

நோய்கள் எளிதில் பற்றும். மிகுந்த எடையின் காரணியமாக அரத்த அழுக்க நோயும் மிகும். எடை கூடியபின் அதைக் குறைப் பதற்காகப் பட்டினி கிடப்பதும், உணவைக் குறைத்துக் கொள் வதும் உடல் நலத்தையே கெடுத்து விடுகின்றன. உணவுக் கட்டுப் பாடு வேறு; பட்டினி கிடப்பது வேறு. சில கடுமையான நோய் களின் பொழுதும்; மருத்துவர் வேண்டுதலுடனும் பட்டினியிருப்பது நல்லதே. இன்னும் சில மனநோய்களின் பொழுதும் பட்டினிப் பண்டுவம் பயன்படுகிறது. ஆனால் உடல் இளைக்க வேண்டும் என் பதற்காகப் பட்டினி கிடப்பது நல்லதன்று.

உணவு உண்பதில் சில முறைகளை நாம் கடைப் பிடித்தாலே எந்த நோயும் நம்மை அணுகாது. பசி எவ்வளவு இருக்கிறது என்பதைப் பொறுத்து உணவு அருந்தக்கூடாது; நம் உடல் மேற் கொள்ளும் பணியினால் எவ்வள்வு ஆற்றலை இழக்கின்றது என் பதைப் பொறுத்தே, நாம் உணவை உட்கொள்ள வேண்டும். இந்த அளவீடு உணவின் வெப்பத்தை மட்டும் கணக்கிட்டதாக ஆகாது. உணவின் தன்மைகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாந்தன் ஒருவனுக்குப் பல்வேறு வகையான உணவுப் பொருள்கள் தேவைப்படுகின்றன. அவற்றுள் ஏதேனும் ஒன்று கிடைக்காமற் போனாலும்—அல்லது ஏதேனும் ஒன்று மிக அதிக மாகக் கிடைத்துக் கொண்டிருந்தாலும், உடலுக்குத் தீமை விளையும். நாட்டியமாடும் ஒரு பெண்ணுக்குத் தேவையான உணவும், ஒரு சுரங்கத் தொழிலாளிக்கு வேண்டிய உணவும் மாறுபடலாம். இப் படிச் செய்யுந் தொழில்களைப் பொறுத்து மட்டுமன்றி, கால நிலை களைப் பொறுத்தும் உணவு வேறுபடுகின்றது. கண்ட நேரத்தில், கண்ட இடத்தில், கண்டபடி தன் மன ஆசைக்காகவும், அடங்காத பசிக்காகவும் உணவு உட்கொள்பவர்களைக் கண்ட நோய்களும் விரைவில் பற்றிக்கொள்ளும்.

அறிவியல் முறைப்படி ஒருவரின் அகவை,பால் நிலை, தொழில், அவர் வாழும் இடம் இவற்றைப் பொறுத்ததாக அவர் உட்கொள் ளும் உணவு அமைதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட உணவு உங்க ளுக்கு மிகவும் பிடிக்கும் என்பதற்காக அதையே மீண்டும் மீண்டும் சாப்பிட்டுக் கொண்டிருக்கக் கூடாது. முறையான இடை வேளைகளில் பல வகைப்பட்ட உணவுப் பொருள்களையும் மாற்றி மாற்றி உண்பதும், எப்பொழுதும் குறைவான அளவுடன் உண்பதுமே உடலை முற்றும் நலத்துடன் வைத்துக்கொள்ளும் சிறந்த வழியாகும். பழங்களையும், பல காய்கறிகளையும் வேகவைத்து உண்பதைவிடப் பச்சையாகச் சாப்பிடுவது மிகச் சிறந்தது. நீங்கள் உண்கிற உணவில், எவ் வளவுக்கெவ்வளவு பச்சைக் காய்கனிகளை உட்கொள்ளுகிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு உங்கள் உடல் நல்ல நலத்துடன் இருக்கும்.

[ஒலிபெருக்கிகளின் தொல்லேகளைக் குறைக்க, தமிழக அரசு அண்மையில் எடுக்கவிருந்த நடவடிக்கைகளுக்கு, எதிர்க்கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்களில் சிலர் எத்துணை எதிர்ப்புக் காட்டினர். வேண்டாத இரைச்சல்களால் மக்களுக்கு எவ்வளவு கேடுகள் உண்டாகின்றன என்பதைக் கட்டுரையைப் படித்துப்பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.]

இரைச்சல் தாக்குதலும் மக்களும்

பேரா. ஏ. சாமுவேல் ஆபிரகாம் க.மு. அறி.மு.,
(முன்னுள், மதுரை அமெரிக்கன் கல்லூரி
விலங்கியல் பட்ட மேற்படிப்புத் துறைத் தலைவர்.)

ஒலி இருவகைகளாகும்: 1. செவியால் கேட்கப்பெறும் ஒலி, 2. செவியால் கேட்கப்படாத ஒலி (Ultrasonics). இக்கட்டுரையில் செவியால் கேட்கப்பெறும் ஒலியால் மக்களுக்கு விளையும் தீங்குகளைப்பற்றிச் சிறிது ஆராயலாம்.

ஒலி ஒரு பொருள் அதிர்வதால் உண்டாவது. அதிரும்பொருள் ஒலிப்பெட்டியிலுள்ள மெல்லிய இழையாக—சவ்வாக (Membrane) இருக்கலாம். அல்லது உரத்து ஒலிக்கும் (Loud Speaker) கருவியிலுள்ள ஊடுருவியாக (Diffuser) இருக்கலாம். தரை அதிர்ந்தாலும் ஒலி பிறக்கலாம். ஆகையால் ஒலியலேகள் பரவும் வேகம் கடத்தியை (Conductor)ச் சார்ந்துள்ளது. விசும்பிடை ஒலியின் வேகம் நொடிக்கு 1083 அடி. ஆனுல் நீரிலோ அதன் வேகம் நொடிக்கு 4900 அடி என்கிருர்கள்.

இரைச்சல் (Noice) என்பதுதான் வேண்டாத அல்லது மக்கள் வெறுக்கும் ஒலியாகும். இவ்வேண்டா ஒலி–மக்கள் வெறுக்கும் ஒலி–மக்கள் உட்பட அனைத்து உயிரிகளேயும் தாக்குகின்றன.

ஏறக்குறையப் பத்தொன்பதாவது நூற்றுண்டு வரை, தொழிற்புரட்சி (Industrial Revolution) முழக்கம் மக்களின் சூழலேக்கெடுக்கும் நிலேயை அடையவில்லே. பின்பு பற்பல பொறிகள் தோன்றின..

[முன் பக்கத் தொடர்ச்சி]
பொதுவாக ஒன்றை நினைவில் வையுங்கள்: எண்ணெயில் வெந்ததை விடத் தண்ணீரில் வெந்தது நல்லது; தண்ணீரில் வெந்ததைவிட ஆவியில் வெந்தது இன்னும் நல்லது; ஆவியில் வெந்ததைவிடப் பச்சையாக உண்பது மிகவும் நல்லது.

—அலெக்சி பொக்குரோவுசுக்கியின் கருத்தைத் தழுவியது.

தொழிற் பட்டறைகள் பல முளைத்தன. அவற்றில் பெரும் சம்மட்டி களும் (Jack-Hammers), துளையிடும் பொறிகளும் (Punching Machines) அமைக்கப் பெற்றன. தொடர்ந்து நீராவி வண்டித் தொடர்கள் தோன்றின. பிறகு வானூர்திகளும் (Aeroplanes) தானியியங்கிகளும் (Automobile) தலைகாட்டின. அவற்றில் குண்டு வீசிகள் (Bombers), மீற்றூர்திகள் (Jet Planes), ஒலி வேகங் கடந்த மீவொலி வானூர்திகள் (Supersonic Jets) எனப் பலவகை கள் உள. இவை உண்டாக்கும் இரைச்சல் ஒலிகள் மக்களைப் பல வழிகளிலும் தாக்குகின்றன. தவிர தேர்த்திருவிழாக் காலங்களி லும், திருமண நிகழ்ச்சிகளின்போதும் உண்டாகும் ஒலிக்கு எல்லையே இல்லை. இவ்வொலி பட்டினங்களிலும், பட்டி தொட்டிகளிலும் எல் லாம் வல்ல இறைவன்போல் நீக்கமற நின்றிலங்குகிறது என்று சொன்னால் மிகையாகாது. தேர்தல் காலங்களில் உண்டாகும் ஒலி களையும் நாம் ஓர்தல் வேண்டும்.

இவ்வேண்டா ஒலியை எவ்வாறு அளப்பது? ஒவ்வொரு பொரு ளையும் அளக்க அடிப்படை அலகு (Unit) உண்டு. எடுத்துக் காட்டாக நீட்டல் அளவுக்கு மாத்திரியும் (Metre), நிறுத்தல் அளவைக்குக் கல்லையும் (Kilo) பயன்படுகிறது. ஒலியை அளக்க 'இடெசிபெல்' (Decibel) என்ற அடிப்படை அலகு பயன்படுத்தப் பெறுகின்றது. தமிழில் 'இடெசிபெல்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு வரையறை கூறுவதற்கு முன் ஒப்புமை முறையில் நாம் அதனைக் காணலாம்.

செவியால் ஓர் ஒலியைக் கேளாத நிலை 0 'இடெசிபெல்' ஆகும். நாட்டுப்புறத்தில் (Sub urban) மாலை நேரத்திலிருக்கும் ஆரவாரத்தை 10 'இடெசிபெல்' எனலாம். மக்கள் ஒருவரோடு ஒருவர் உரை யாடும்போது 60 'இடெசிபெல்' ஒலி பிறக்கிறது. கொதிகலன்(Boiler) செய்யும் தொழிற் கூடத்தில் 100 'இடெசிபெல்' இரைச்சல் இருக்கும். இன்னொரு வழியாகவும் 'இடெசிபெல்'லுக்கு விளக்கம் தரலாம். பெரு வழி (High way) ச் சாலையின் ஓரத்திலிருந்து மூன்றடித் தொலைவில் ஒருவர் நின்று கொண்டிருக்கும்போது ஒரு சரக்கிழுவை (Tractor) வண்டி மணிக்கு 40 கல் வேகத்தில் சென்றால் காதில் விழுவது 77 'இடெசிபெல்' ஒலியாகும்.

ஒரு சரக்கு வண்டி (Diesel Truck) ஓடும்போது ஒருவர் அவ் வண்டியிலிருந்து 50 அடித் தொலைவிலிருந்தால் அவரை 84 'இடெசி பெல்' தாக்கும். அதே விரைவில் செல்லும் பொறி மிதியிலிருந்து (Motor Cycle) 90 'இடெசிபெல்' ஒலி எழும். மீற்றூர்தி (Jet Plane)

நம் வீட்டுக்கு மேல் 1000 அடி உயரத்தில் சென்றால் ஏறக்குறைய 100 'இடெசிபெல்" இரைச்சல் நம்மைச் சூழ்கிறது. திருமணக் காலங்களிலும் பிற விழா நேரங்களிலும் பயன்படுத்தப்பெறும் ஒலிபெருக்கி ஒலங்கள் எத்துணைக் கேடு விளைவிப்பன என்று சொல்லத் தேவையில்லை.

ஒலி எவ்வெவ் வழிகளில் ஊறு விளைவிக்கின்ற தென்பதை நோக்குவோம். முதலில் தொழிற்சாலை ஒலித்தொல்லைகளைப்பற்றிப் பார்ப்போம். இரைச்சலின் காரணியமாகப் பொருளாக்கம் குறைகிறது. தொழிலாளர்கள் வேலைகளில் மிகுதியான பிழைகள் நேர்கின்றன. எதிர்பாரா நேர்ச்சிகள் நிகழ்கின்றன. தொழிற்சாலையில் இரைச்சல் குறையும்போது பிழைகள் (Errors) குறைகின்றன. பொருளாக்கம் மிகுதியாகிறது. முதலாளிகளுக்கு வருவாய் பெருகுகிறது. மேலும் நேர்ச்சிகள் அடிக்கடி ஏற்படுவதில்லை. அதனால் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பெறும் இழப்பீடும் குறைகிறது. அவர்கள் வேலைக்கு வராமையும் (Absence) குறைகிறது. ஒரு தொழிற்சாலையில் முன்பிருந்த இரைச்சலில் 10 'இடெசிபெல்' குறைத்ததால் அங்கு 22 விழுக்காடு வேலை மிகுதியானது. ஒலி ஒருவரது கவனத்தைக் குறைக்கிறது. கவனக் குறைவால் பிழைகளும் நேர்ச்சிகளும் ஏற்படுவது தெரிந்ததே.

வேண்டா ஒலி உடலுக்கும் உள்ளத்துக்கும் ஊறு விளைவிக்கும் தன்மை வாய்ந்தது. 50 'இடெசிபெல்' ஒலி உயிர்களை மிகுதியும் தாக்குவதில்லை என்று சொல்லப் பெறுகிறது. ஆனால் 110 'இடெசிபெல்' இரைச்சல் மக்களின் மன அமைதியைக் குலைக்கும். அதைவிட 150 'இடெசிபெல்' கூச்சல் கொடிய தீங்கு விளைவிக்கும் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

ஈண்டு, பர். உரோசன் பின்லண்டு (Dr. Rosan Finland) ஒலிகளிற் செய்த ஆய்வுகளைக் குறிப்பிடலாம். அவர் வேண்டா ஒலி செவிப்புலனை மட்டும் தாக்குவதில்லை, மனத்தின் வினையாற்றலையும் கெடுக்கின்றது என்று கண்டார், அண்மையில் கேபர் (W.E. Caber) என்பார், 100 (நூறு) 'இடெசிபெல்' ஒலியில் எலிகளை நாடோறும் 30 மணித்துளிகள் இருக்கும்படி செய்தார். அதனால் அவை நோயை எதிர்க்கும் ஆற்றலை (immunity) இழந்து வலிப்பு நோய்க்கு ஆளாகி இறுதியில் இறந்தே போயின. ஒலியின் ஆற்றல் என்னே!

ஒலி குருதி யழுத்தத்தையும் (Blood-pressure) மிகுதியாக்குகின்றது. குழந்தை அழும்போது உண்டாகும் ஒலியால் நெஞ்சு இருமடங்கு மிகுதியான குருதியை நாடிகளுக்குள் (Arteries) செலுத்து

கிறது. இச்செயல் குருதி யழுத்தத்தை மிகுதிப்படுத்துகின்றது. நெஞ்சு மிகையான குருதியைச் செலுத்த மிக்க வலிவோடு இயங்கவேண்டி உள்ளதால் அதன் தசைகள் நலிவடைந்து நாடிகளும் கேடுறுகின்றன.

ஒலி உயிரிகளை எவ்வாறு தாக்குகிறது என்பதை அறிய மான்றியால் பல்கலைக் கழகத்தில் கிலாடு போற்றியர் (Claud Fortier) என்ற ஆய்வாளர் ஓர் ஆய்வினைச் செய்தார். அவர் மின் சங்க ஒலத்தின் (Electric Siren) ஓயாத ஒரே அளவான ஒலிப்பில் எலிகள் இருக்குமாறு ஓர் ஏற்பாடு செய்தார். அப்போது அவ்வெலிகளின் உடல் நலம் நலிந்தது. அவற்றின் இரைப்பையில் புண்கள் தோன்றின. தொண்டை உட்சுரப்பி (Thymus gland) சிதைந்தது. நரம்புகளின் கூருணர்ச்சி (Irritability) பரபரப்புத் தன்மை அடைந்தது. உடற்சோர்வு மேலிட்டது. உள்ளுறுப்புகளில் சிதைவுக்கான அறிகுறிகளும் தோன்றின.

வானூர்தி நிலையத்திற்கு அண்மையில் குடியிருப்போர் எளிதில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைக்குச் செல்லும் நிலைக்கு ஆளாவர். இவர்கள் வேண்டா ஒலிக்கு மிகுதியும் இலக்காவர்.

ஒலி உயிரிகளின் உடலில் ஒருவகை கொழுப்புப் பொருளை (Cholesterol) மிகுதியாக்குகிறது. இப்பொருள் குருதிக் குழாய்களின் உள்ளே படிந்து அவற்றைக் கடினமாக்குகிறது. இந்நிலைமையைக் குருதிக் குழாய் கடினமாதல் (Artereo Sclerosis) என்பர் மருத்துவர். இந்நிகழ்ச்சியால் குழாய்கள் சுருங்கி விரிந்து குருதியை முன்னேக்கிச் செலுத்துவதற்கு இடையூறு நேரிடலாம். சூலுற்ற பெண்களிடம் மேற்கண்ட கொழுப்புப் பொருள் மிகின் பிறக்கும் குழந்தை இயல்பு கடந்த (விகாரமான) பிறவியாயிருக்கும்,

1966-இல் கார்க்கி என்ற நகரில் ஒலி, நாய், முயல் முதலிய விலங்குகளை எவ்வாறு தாக்குகிறது என்று காண உயிரியலார்கள் (Biologists) ஆராய்ச்சிகள் நடத்தினர்கள். அவர்கள் நாடியின் குருதியழுத்தத்தையும் (Arterial Pressure) மின் செயலாற்றல் (Action Potential) வளத்தையும் ஒரு முயலின் தலையில் ஒரு மின்கடத்தியை (Electrode) வைத்து மூளையின் பற்பல பரப்புகளில் ஏற்படும் மின் செயலாற்றல் வளத்தின் மாறுதல்களையும் கண்டறியும் ஆய்வை நடத்தினர்கள். ஆனுல் அவர்கள் மேற்சொன்ன விலங்குகளின் இரைப்பை இயக்க ஆய்வை (Electrogestrography) நடத்தினர்களா என்பது தெரியவில்லை.

உயிரியலார்கள் பலர் செய்த ஆய்வுகளிலிருந்து பின்வரும் உண்மைகள் உலகுக்குத் தெரியவந்தன. 1. ஓயாத ஒலி உடலுக்கு ஊறு விளைவிக்கின்றது 2. ஒருவரது உள்ளத்தின் அமைதியைக் கெடுத்து விடுகிறது, 3. ஒலியின் கடுமை குருதிக் குழல்களை நெரித்து விடுவதாலும், சிறுநீர்ப்பிரிப்பு ஒட்டி (Adrenalin gland) என்ற உட்சுரப்பியின் சுரப்பு, குருதியில் செலுத்தப்படுவதாலும் குருதி அழுத்தம் (Blood Pressure) மிகையாகின்றது. மாலையில் தொழி

லாளர்கள் வேலை முடிந்து வரும்போது அவர்களின் முகம் வெளுத்து இருப்பதற்குக் கரணியம் வேண்டா ஒலி குருதிக் குழல்கள் நெரித்துத் தோலுக்கு வேண்டிய குருதி செல்லாதபடி தடுப்பதே.

ஒலி மக்களைச் செவிடராக்கி விடும். நாகரிகம் நிறைந்த மேல் நாடுகளில்—சிறப்பாக அமெரிக்க ஒன்றிய நாடுகளில் (U. S. A.) கோடிக்கணக்கான மக்கள் செவிடராகிக் காது கேட்க உதவும் கருவிகள் (Hearing Aids) பயன்படுத்துகின்றனர்.

ஒருவர் இன்னொருவரை இரு வழிகளில் துன்புறுத்தலாம். அண்மையிலிருந்து ஒருவரை ஒருவர் அடித்தல் ஒருவகைத் துன்புறுத்தல். ஒருவருக்குத் தொலைவிலிருந்து மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரையில் ஒலி பெருக்கியால் தொல்லை கொடுப்பது, மற்றொருவகைத் துன்புறுத்தல், அது தொலைத் துன்புறுத்தல் (Tele persecution) என்றழைக்கப் பெறுகிறது,

வேண்டா ஒலியால் இருபத்து நான்கு மணி நேரமும் மக்களுக்குத் தொல்லைதான். இரவில் 50 'இடெசிபெல்' ஒலியிருப்பின் ஒருவருக்குத் தூக்கம் வர 1-30 மணி நேரம் பிடிக்கும். ஆனால் 30 'இடெசிபெல்' ஒலி மட்டும் இருந்தால் அதே ஆள் இருபது மணித்துளிகளில் தூங்கி விடுவார்,

வானூர்தி நிலையங்களின் அண்மையிலிருக்கும் பள்ளிகளில் ஆசிரியர்கள் கல்வி புகட்டலும் பள்ளிச் சிறுவர்கள் கல்வி கற்றலும் எளிதல்ல, ஆசிரியர்கள் கல்வி புகட்டுவார்களானால் அது மிகவும் அரிய செயல்.

ஒலி, வீடுகளில் வளர்க்கப்பெறும் விலங்குகளையும் தாக்குகிறது. பால் கறப்போர் அந்த வேளையில் உரக்கச் சிரித்தாலும் பேசினாலும் ஆவின் பால் மிகுதியும் சுரக்காது. வேண்டாத ஒலி பன்றியின் எடையைக்கூடக் குறைத்து விடுகிறதாம். இலெனின் கிராடில் (Lenin grad) சாலை மிதியின் (Bulldozer) ஒலியால் கோழிகளின் இறகுகள் உதிர்ந்தன. அவை முட்டைகள் இடுவதையும் நிறுத்தின. ஏறக்குறைய 191 முதல் 200 வரையான 'இடெசிபெல்' ஒலியால் செவிப்பறை (Ear drum) கிழிந்து ஒருவருக்கு மீளாச் செவிட்டுத்தன்மை (Permanent deafness) தோன்றும் நிலை ஏற்படலாம்.

ஒருவரின் உள்ளத்தையும் உடலையும் கெடுக்கவல்லது ஒலி வேகம் கடந்த மீ ஒலி வானூர்தி (Super sonic Jet plane). இது ஐந்து 'போயிங்' (Boing) வானூர்திகள் உண்டாக்கும் ஒலியைப் போல ஐம்மடங்கு பேரொலியை உண்டாக்கும்,

மேல் நாடுகளில் வேண்டா ஒலியின் ஆற்றலைக் குறைக்கப் புதிய கருவிகளை மக்கள் பயன்படுத்துகின்றனர்; அவற்றுள் காது அடைப்பான் (Ear plug) ஒன்று. இது, காதுக்குள் நுழையும் ஒலியின் ஆற்றலைக் குறைக்கும். மேலும், ஒலிபடாதிருக்கச் செய்யும் அமைவும் (Silencer) தற்காலத்தில் பயன்படுத்தப் பெறுகிறது. ஒலியின்

கடுமையைத் தடுக்க சிறப்பு உட்கூரை (Acoustic ceiling) பயன் படுத்தப் பெறுகிறது. பொறியியல் வல்லுநர்கள் (Engineers) சிலர் பலகணிகளுக்கு இரட்டைக் கதவுகள் பொருத்தினால் நலமாக இருக்கு மென்றெண்ணுகிறார்கள். மேல் நாடுகளில் ஓர் ஒலி உண்டான வுடன் அதற்கு மறு நிலையான ஒலியை (Reverse Noice) உருவாக் கினால் அது முந்திய ஒலியை ஒழித்துவிடுமாம். மரங்கள் அடர்த்தி யாய் இருப்பின் அவை இரைச்சலைக் குறைக்கலாம் என்கிறார்கள்,

சட்டங்கள் (Laws) இயற்றிக் கூச்சலை ஒருவாறு குறைக்கலாம். எடுத்துக்காட்டாக மேற்கு செருமனியில் புதிய ஒழுங்கின்படி மிகுதி யான இரைச்சல் உண்டாக்குவோருக்கு 500 மார்க்கு (நாணயம்) தண்டம் போடப்பெறுகிறது. அங்கு 45 'இடெசிபெல்'லுக்கு மேல் ஒலி இருக்கக்கூடாது. ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்ற விடுமுறை நாட்களிலும் ஒலி பெருக்கியோ அல்லது கை வானொலிப் பெட்டியோ (Transister) பயன்படுத்தக்கூடாது. சில நாடுகளில் தானியியங்கி -கள் (Automobiles) மிகுதியான ஒலி உண்டாக்கிக்கொண்டு செல்லுமானால் காவலர்கள் அவற்றைத் தடுத்து நிறுத்தித் தண்டமிடு கின்றனர். தீயணைக்கும் வண்டிகளுக்கும் கோயில் மணியோசைக் கும் மட்டிலும் சட்ட விலக்குக் கொடுக்கப் பெற்றுள்ளது.

நம் நாட்டில் ஒலிக் குறைப்புப்பற்றி அரசோ மக்களோ எண்ணு கிறார்களா? ஒலியை மட்டுப்படுத்த அல்லது கட்டுப்படுத்த ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் பெறுமா? அண்மையில் தமிழ் நாட்டுச் சட்ட சவைக்கு ஒலியை மட்டுப்படுத்தும் தீர்மானம் கொண்டுவரப் பெற்ற தாகவும் உடனே உறுப்பினர்கள் அது மதத்தையும் இறை வழிபாட் டையும் நிலைகுலைக்கும என்ற கருத்தைத் தெரிவித்ததாகவும் சொல் லப்பெற்றது. ஆம், நம்நாட்டில் புதுமைக்கு எதிர்ப்பு இருப்பது கண் கூடு. அது நம்நாட்டு வழக்கமாகி விட்டது. தொடக்கத்தில் உடன் கட்டை ஏறுதலுக்கும், குழந்தை மணத் தடுப்புக்கும், மதுவிலக்குக் கும்கூட கடும் எதிர்ப்புகளும் கிளர்ச்சிகளும் இருந்தன.

ஒலியைக் கட்டுப்படுத்தும் சட்டம் இறை வழிப்பாட்டுக்கோ பொதுக் கூட்டங்களுக்கோ ஊறுபாடு விளைவிக்கும் என்றால், அவற் றின் பெயரால் காலையும் மாலையும் இரவும்—இன்ன நேரம்—என்று இல்லாமல் ஒலி பெருக்கியின் உதவியால் இரைச்சலை உருவாக்கிப் பிறருக்குத் தீங்கு விளைவிப்பது மட்டும் சரியாகுமா ?

ஒருவரது நல்லுணவு அடுத்தவருக்கு நஞ்சு (One man's meat is another man's poison) என்பது பழமொழி. ஒருவரது இசை இன்னொருவருக்கு வசையாகவும் இருக்கலாம். ஆகையால் உணர்ச்சி வயப்படாது ஒலியின் உண்மையான விளைவுகளைக் காய்தல் உவத்தலின்றி ஆராய்தல் இன்றியமையாதது.

"குணம் நாடிக் குற்றமும்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்" என்பது வள்ளுவரின் கருத்து. அமைதி ஓங்குக! வேண்டா ஒலி நீங்குக! ○

தொடர்-2.

அறிவியல் நெறிமுறை வரையறைகள்-பூதநூல்.

இல. க. இரத்தினவேல்.

(பூதவியல் துறை : பெரியார் கல்லூரி; திருச்சி-20.)

2. விசை இயக்க வியல் (DYNAMICS)

1. இயக்கம் (motion): துகள் (porticle) தன் இருப்பைத் தொடர்ந்து மாற்றுதல் இயக்கம் எனப்பெறும்.

2. இடப்பெயர்ச்சி (displacement) என்பது, இயங்கும் துகளின் இருப்பிட மாற்றம். துகளின் தொடக்க இறுதி இருப்பை இணைக்கும் நேர்க்கோட்டுத் தொலைவு இதன் அளவாம்;

துகள் தன் இருப்பைத் தொடர்ந்து மாற்றுதல்
இயக்கம் எனப்பெறும், இடப்பெயர்ச்சி என்பது
இயங்கும் துகளின் இருப்பிட மாற்றம்;
துகளின் தொடக்க இறுதி இருப்பை
இணைக்கும்நேர்க் கோட்டுத் தொலைவிதன் அளவாம்.

3. செலவு (speed): துகளின் இயக்க மேனி [(time) (rate)] செலவு. இயக்கத் திசை இங்குக் கருதப்பெறுது:

துகளின் இயக்க மேனி செலவே!
(இயக்கத் திசையிங்குக் கருதப் பெறுது)

4. சீர்செலவு (uniform speed): இயங்கும் துகள் சமகாலக் கூறுகளில் (equalintervals of time)-இக்காலக்கூறு எத்துணைச் சிறிதெனினும் (however small these intervals may be)-சம இடைவெளியைத் திசைக்குறிப்பின்றிக் கடப்பின் அத்துகள் சீர்செலவு உடையது எனப்படும்.

இயங்கும் துகள்சம காலக்கூ றுகளில்—
இக்காலக் கூறெத் துணைச்சிறி தெனினும்—
சமயிடை வெளியைத் திசைக்குறிப் பின்றிக்
கடப்பின் அத் துகள்சீர் செலவுடைத் தெனப்படும்.

5. கதி (velocity): துகளின் கதி, அ:து இடம் பெயர் மேனி (velocity of a particle is its displacement rate).

துகளின் கதிய: திடம்பெயர் மேனி

5: நேர்க்கோட்டில் ஒரே திசையில் செல்லுவதை கதிக்கச் செல்லுதல் என்பது உலக வழக்கு. உருசியாவில் வெளியான பொழுதுபோக்குப் பௌதிகத்தில் vetocity-க்குக் கதி என்ற சொல்லே ஆளப்பட்டுள்ளது. இருந்தும் ஒப்புச் செலவு (relative speed) என்று பொருள்படும் வேகத்துடன் திசையை இணைத்துத் தவறுய்த் திசைவேகம் என்பர்.

6. சீர்கதி (uniform velocity); இயங்கும் துகள் சமகாலக் கூறுகளில்—இக்காலக்கூறு எத்துணைச் சிறிது எனினும்—சம இடை வெளியை ஒரே திசையினிலே கடப்பின் அத்துகள் சீர் கதி உடையது என்பர்.

இயங்கும் துகள்சம காலக்கூ றுகளில்
இக்காலக் கூறெத் துணைச்சிறி தெனினும்
சமஇடை வெளியை ஒரேதிசை யினிலே
கடப்பின் அத் துகள்சீர் கதியுடை யதென்ப.

7. மாறு கதி (variable velocity): துகள்தன் கதியின் மதிப்பிலோ, திசையிலோ மாற்றம் ஏற்படின் துகள்தான் மாறுகதி உடையது:

கதியின் மதிப்பிலோ திசையிலோ மாற்றம்
ஏற்படின் துகள்தான் மாறுகதி உடையது.

8. சராசரிக் கதி (average velocity): குறித்த காலக் கூறில் துகளின் இடம்பெயர் மேனி சராசரிக் கதியாம்:

குறித்த காலக் கூறில் துகளின்
இடம்பெயர் மேனி சராசரிக் கதியாம்.

9. முடுக்கம் (acceleration): கதியின் மாற்ற மேனி முடுக்கம். (acceleration is the rate of change of velocity).

கதியின் மாற்ற மேனி முடுக்கம்.

10 சீர்முடுக்கம் (uniform acceleration): இயங்கும் துகள் சமகாலக் கூறுகளில்-இக்காலக்கூறு எத்துணைச் சிறிது எனினும்—சம கதி மாற்றம் உற்றால் சீர்முடுக்கம்.

இயங்கும் துகள்சம காலக்கூ றுகளில்
இக்காலக் கூறெத் துணைச்சிறி தெனினும்—
சமகதி மாற்றம் உறின்சீர் முடுக்கம்.

11, மாறு முடுக்கம் (variable acceleration): குறித்தகாலக் கூறுள் கதியின் மாற்றம் சமம் இல்லை எனின், அத் துகள் மாறு முடுக்கம் உடையது என உரைக்கப்படும்.

குறித்த காலக் கூறுள் கதியின்
மாற்றம் சமம் இல்லை எனின்மாறு முடுக்கம்
உடையதத் துகள்என உரைக்கப் படுமே.

12. கதியின் குறைவு மேனி ஒடுக்கம்,

13. நியூட்டனின் மூன்று இயக்க நெறிகள் (Newton's three laws of motion) : *1. புறவிசை இன்றிப் பொருள் எதும் தன்னிலையிற் பிறழாது. 2. உறும் இயக்கத் திணிவின் மாற்ற மேனி* (rate of change of momentum) *தான் தாக்குகின்ற செறி விசை* (impressed force)*-க்குத் தகவாம்; திசை விசைத் திக்கே. 3, செயல் அனைத்தும் சரிஎதிர் கொள்ளும்.*

(கட்டளைக் கலித்துறை)

புறவிசை யின்றிப் பொருள்எதும் தன்னிலை யிற்பிறழா
துறும்இயக் கத்திணி வின்மாற்ற மேனிதான் தாக்குகின்ற
செறிவிசைக் குத்தக வாம்;விசைத் திக்கே செயலனைத்தும்
சரியெதிர் கொண்மெனச் சாற்றும்நி யூட்டனின் முந்நெறியே!

13-அ. நியூட்டனின் மூன்றும் இயக்க நெறியின் விரித்த கூற்று :

நியூட்டன் மூன்றும் இயக்கநெறி யாவது:
ஒன்றுக் கொன்று செயற்படும் இரண்டு
துகள்களின் விசைசமம்; திசைஎதிர் ஆகும்.

14, இயக்கத் திணிவு : *நியூட்டனின் சொற்களில் பொருளுள் அடங்கிய "இயக்க அளவே"* (quantity of motion contained in a body).

15, விசை மதிப்பு : *பொருளில் விசை விளைத்த முடுக்கத் துடன் அப்பொருள் நிறையைப் பெருக்க விசைமதிப்பு வரும்.*

பொருளில் விசைவிளைத்த முடுக்கத் துடன்பொருள்
நிறையப் பெருக்க விசைமதிப்பு வருமே.

16. நியூட்டன் :

ஒருகிலோ கிராம்நிறைப் பொருளில் நொடியில்
நொடிக்குஒரு மீட்டர் முடுக்கம்உண் டாக்கும்
விசையின் மதிப்புஒரு நியூட்டன் எனப்படும்.

17. இயக்கத் திசையின் அழிவின்மை நெறி (law of conservation of momentum) : *சூழ் அமைப்பில்* (in a closed system) *இயக்கத்திணிவு மாருது.*

சூழமைப்பில் இயக்கத் திணிவுமா ருது. [தொடரும்]

திரவிடரின் தனித்தன்மை புனைவா; உண்மையா?

பர். ஆர். ஈ. ஆசர்
மொழிநூல் ஆய்வாளர், எடின்பரோ பல்கலைக் கழகம்.
தமிழாக்கம்: பி. இராமநாதன், வழக்குரைஞர்.

தமிழின் தொன்மை: இவையெல்லாம் திராவிடரிடையே ஒருமைப்பாட்டு வீழ்ச்சி தரப் போதுமானவை என்பது தெளிவு. வேறு சிலவற்றையும் சேர்க்கலாம். சில வேளைகளில் சேர்க்கவும் பட்டன. சிந்து வெளி நாகரிகம் பெரும்பாலும் திராவிடருடைய தாகத்தரன் இருக்கவேண்டும் என்பது உண்மையெனினும், இதனை எல்லார்க்கும் ஒப்ப முடிந்த முடிவுபோலக் கூறலாயினர். தமிழ் மன்னன் ஒருவன் இமயம்வரையும் படை நடத்திச் சென்றான் என்னும் செய்தி மீண்டும் நினைவிற்குக் கொண்டு வரப்பட்டது. * மூன்று தமிழ்க் கழகங்களில் முதலாவது கி. மு. 20000 வாக்கில் நிறுவப்பட்டது என்னும் கற்பனைக் கதை கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டது. அக்கதைக்கும் புத்துயிர் ஊட்டப் பட்டது. எனினும் இதனை முற்றிலும் நம்பியவர் சிலரே. மிகுந்த மாநிலப் பற்றுக் கொண்டோருள் சிலர் சமசுக்கிருத இலக்கியத்தை விடத் தமிழ் இலக்கியம் தொன்மை வாய்ந்தது என்று சொல்லும் அளவில் மன நிறைவு அடைந்தனர். சிலர் இன்று கிட்டும் சமசுக் கிருத இலக்கியங்களில் மிகத் தொன்மை வாய்ந்தவைகூடத் தமிழில் இன்று கிட்டும் பண்டை இலக்கியங்கள் அளவு தொன்மை வாய்ந்தவை அல்ல என்று தங்கள் கற்பனையடிப்படையில் கூறினர். வேறு சிலர் கேட்கும் ஒரு கேள்வி சரியானதேயாகும். "தமிழ் நூல் ஒன்றுக்கும் சமசுக்கிருத நூல் ஒன்றுக்கும் இடையே ஒப்புமை இருந்தால் ஏன் எப்பொழுதும் தமிழ் நூல்தான் சமசுக்கிருதத்தைப் பின்பற்றியது எனக் கருதவேண்டும்?" என்பதே அக்கேள்வியாகும்.

தமிழ்நாட்டில் மொழித் தூய்மை இயக்கம்: தமிழ் இலக்கியத்தின் தொன்மை பற்றி மிகையாகக் கூறுவிட்டாலும்கூட இந்தியப் பண்பாட்டிலும் வரலாற்றிலும் தமிழுக்குச் சிறப்பான

* ஆசரின் வேறு சில கருத்துக்காக நாம் இதனை அப்படியே வெளியிட வேண்டியுள்ளது. மற்றபடி இக்கருத்து பிழையானது.

தனியிடம் உண்டு எனக் கூறலாம். இங்கு ஒரு கேள்வி எழுகிறது. நாம் தென்னிந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிக் கூறுவதா ? தமிழர் ஒருமைப் பாட்டைப் பற்றிக் கூறுவதா ? என்பதே அது. வட நாட்டு அரசுகளின்கீழ் வராமல் திரவிடத் தென்னிந்தியா, முழுவதும் தப்பிக்க இயலவில்லை. தமிழ், மலையாளப் பகுதிகள் மட்டுமே தப்பித்தன. பேராற்றல் பொருந்திய ஆரிய ஊடுருவலைச் சிறிது காலமாவது எதிர்த்து நிற்க தமிழ் தவிர பிற திரவிட இலக்கியங் களால் இயலவில்லை. தமிழ் இலக்கியத்திற்கே இயன்றது. மேலும் பிற திரவிட மொழிகளைப்போல் அல்லாமல், தூய திராவிட மொழி யாகப் பெரும் அளவுக்கு நின்று நிலவுவதும் தமிழே. எழுத்து, மேடைப்பேச்சு மொழியிலும் சரி, மக்கள் பேச்சு வழக்கிலும் சரி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைவிட மிகக் குறைந்த அளவிலேயே தமிழ் சமசுக்கிருதச் சொற்களைக் கடன் வாங்கியுள்ளது. கால்டுவெல் குறிப்பிட்டதுபோல சமசுக்கிருதத் திடம் சில சொற்களைத் தமிழ் கடன் பெற்ற நேரத்திலும்கூட, பல வேளைகளில், தூய தமிழ்ச் சொற்களும் இணையாகப் பயன்படுத்தப் பட்டு வந்தன. மேலும் தமிழில் கடனாகப் பெற்ற சொற்கள் தமிழ் எழுத்துகளிலேயே எழுதித் தமிழ் ஒலி முறையுடன் இசைய ஒலிக் கப்படுகின்றன. பிற திரவிட மொழிகளில் அப்படி அன்று. திராவிட மொழிகளில் இல்லாத சமசுக்கிருத ஒலிகளை எழுதுவதற் குச் சிறப்பு எழுத்துகள் பிற திராவிட மொழிகளில் ஏற்பட்டுவிட்ட போதிலும் தமிழில் கிடையா. மொழியில் தூய்மை நாடும் தன்மை நெடுகிலும் தமிழரிடம் இருந்து வந்துள்ளது என்பதை இவையெல் லாம் விளக்கும். இந்த மொழித் தூய்மை உணர்ச்சி தமிழ்நாட்டில் இந்த இருபதாம் நூற்றுண்டில் உள்ளது போன்ற வலுவுடன் முன் எப்பொழுதும் இருந்ததில்லை. மொழித் தூய்மை நாடும் இவ் வுணர்ச்சியைத் தமிழ் நாட்டின் உணர்வு கொண்ட அரசியல் கட்சிகள்—குறிப்பாகத் தற்பொழுது தமிழகத்தை ஆளும் கட்சி (திராவிட முன்னேற்றக் கழகம்) தங்கள் நன்மைக்குப் பயன்படுத்தி வந்துள்ளது வியப்புக்குரியதன்று.

தி. மு. க. வின் வெற்றிக் காட்சி கண்டு திகைத்து அதற்குப் போலிக் காரணம் புகலும் சிலர் "தி" குறிப்பிடும் "திராவிடம்" என்னும் சொல்லே தமிழ், சமசுக்கிருதத்திடம் இருந்து கடனாகப் பெற்றதுதானே என வீணில் கூறியுள்ளனர். பல சொற்களில்

வேர்ச் சொல் எம்மொழிக் குரியது என்பதுபற்றி ஐயப்பாடுள்ளது. அத்தகைய சொற்களே மொழித்தூய்மை வேண்டுவாரும் பயன் படுத்துவர். மேலும் "தமிழ்" என்னும் தமிழ்ச் சொல்லே சமசுக் கிருதத்துக்குச் சென்று "திராவிட" என்று வழங்கி வருகிறது என்னும் கருத்தும் கடந்த நூறு ஆண்டுகளில் அவ்வப்பொழுது தலைகாட்டி வந்துள்ளது. அப்படியாயின், "திராவிடம்" என்பதே சமசுக்கிருதம் திரவிட மொழியிடம் கடனுகப் பெற்ற சொல்தான் என்று தருக்கமிட்டுத் "திராவிடம்" சமசுக்கிருதச் சொல்லெனக் கூறும் (போலி) ஆராய்ச்சியாளர் வாயடைக்கச் செய்ய இடமுண்டு அன்றோ?

பாகித்தானும், திராவிடநாடும்: தனித்திராவிட நாட்டுக்கொள்கை தோன்றிய காலம் இந்தியாவிலிருந்து பிரிந்த பாகித்தான் என்னும் தனி நாடு கோரும் இயக்கம் வளர்ந்த கால மாகும். அக்காலத்தில் திரவிட நாட்டுக் கொள்கைக்கு ஆதரவாக இருந்த பல நிலைமைகளில், "திரவிட மொழிகளும் பண்பாடும் ஆரியத்தோடு தொடர்பற்றவை" என்ற கருத்தும் ஒன்று எனினும், பொருளியல் அடிப்படையிலான தருக்கங்களும், ஆரியப் பார்ப்பன ருக்கும் இந்திக்கும் எதிரான உணர்ச்சியும் போன்ற நிலைமைகளும் அக்கொள்கைக்கு ஆதரவாக இருந்தன. ஆனால் இப்பொழுது பார்க் குங்கால் அக் கொள்கைக்கு மிக முகாமையான வலுவூட்டியவை, தாய்மொழிப் பற்றும், தம் மொழியின் தொன்மை வாய்ந்த, தொடர்ந்த இலக்கிய மரபில் தமிழ் மக்கள் கொண்ட பெருமையுமே ஆகும் எனத் தெளியலாம்.

திராவிட மொழிகளில் தமிழ் சிறப்பான தனித்தன்மை வாய்ந்தது என மேலே கூறியதிலிருந்தே தமிழ் நாட்டுக்கு வெளியே திராவிட நாட்டுக் கொள்கைக்கு மிகச் சிறுபான்மையினரே ஆதரவு காட்டியது ஏன் என்பதற்கான காரணமும் விளங்கும். 1915-ஆம் ஆண்டில் சி. நடேசன் "திராவிடச் சங்கத்தை"த் தோற்றுவித்ததி லிருந்து இக்கொள்கைக்கான இயக்கம் தொடங்கியது. ஓராண்டு கழித்து "தென்னிந்திய மக்கள் சங்கம்" அமைக்கப்பட்டது. 1917-ஆம் ஆண்டில் தென்னிந்திய நலவுரிமைக் கழகம் (அல்லது நயன்மைக் கட்சி—சசுடீசு கட்சி) தோன்றியது. பின் இரண்டிலும் மலையாளத்தவரான டி. எம். நாயர் முதன்மையான இடம் பெற்றார். பிற்காலத்தில் தோன்றிய திராவிடர் கழகமும் அதனின்றும்

தோன்றிய திராவிட முன்னேற்றக் கழகமும் பெரும்பாலும் தமிழ் நாட்டு இயக்கங்களே. 1958-ஆம் ஆண்டு மொழி வழியாக மாநிலங்-கள் அமைக்கப்பட்ட பின் திரவிடத் தென்னிந்தியாவை முழுவதும் உள்ளடக்கிய திராவிட நாட்டின் கொள்கை கைவிடப்பட்டது.

தமிழ் நாட்டுக்கு வெளியே திராவிடர் இயக்கம் காலூன்றக் கூடியதன்று என்பது இப்பொழுதுள்ள நமக்குத் தெளிவாக விளங்கும். தெலுங்கு, கன்னடப் பகுதிகளின் வரலாறு வேறுபட்டது. அவை வட இந்தியப் பேரரசுகளுக்கு ஒருநாளும் ஆட்படாமல் இருந்தவை அல்ல. மலையாளம் தன்னை வளப்படுத்திக் கொள்ள என்றும் பிற மொழிகள் எதிலிருந்தும் கடன் பெற்றுக் கொள்ள இசைந்தே இருக்கிறது. எனினும் அவர்கள் தாய் மொழிப் பற்று தமிழகத்தார் தாய்மொழிப் பற்றைவிடக் குறைந்தது எனக் கூறுவதற்கில்லை. அவர்கள் பற்று வேறு வகைப்பட்டது (சற்று மாற்று வேறுபட்டது) என்று மட்டும் தோன்றுகிறது.

அறிஞர்களுக்கு விழா: கடந்த சில ஆண்டுகளில் தமிழ் ஆராய்ச்சிக்காகத் தொடர்ந்து அனைத்து நாட்டு மாநாடுகள் நடைபெற்று வந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். வேறு எந்த இந்திய மொழிக்கும் அத்தகைய மாநாடுகள் இதுவரை (1972) நடைபெறவில்லை. இம்மாநாடுகளை ஆராய்ச்சிக்காக என்றே ஆராய்ந்து அறிஞர்கள் மட்டும் பங்கேற்பனவாக நடத்திடக் கடுமையான முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும் தமிழ்ப் புலமையில்லாத தமிழர்களிடையேயும் அம்மாநாடுகள் வியத்தகு ஆர்வத்தைத் தோற்றுவித்தன. சென்னையில் நடந்த இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு—மாநாட்டில் இந்த ஆர்வம் மிக அதிகமாகக் காணப்பட்டது. தமிழர்கள் தங்கள் மொழியின்பாலும், பண்பாட்டின்பாலும் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றைக் காட்டிக் கொள்ள வகை செய்து தமிழ்நாட்டு அரசு அக்கருத்தரங்கு—மாநாடு நடைபெற்ற அதே நேரத்தில், தமிழ்ப் பாடல்கள், சொற்பொழிவு ஆகியவையும் பிறவும் அடங்கிய "உலகத் தமிழ் மாநாடு" என்னும் ("பூம்புகார்") விழாவை நடத்தியது. அவ்விழாவைப் பயன்படுத்தி அரசியல் ஊதியம் பெறவே இவ்வாறு செய்யப்பட்டது எனச் சிலர் கதைத்தனர். வேறுபட்ட அவ்விரண்டு மாநாடுகளுக்கும் வேறுபாடு தெரியாமல் இருந்தனர். வெளியார் சிலர், முப்பது நாடுகளிலிருந்து தமிழ் ஆராய்ச்சி அறிஞர்களை வரவழைத்து அம்மாநாட்டைக்

கூட்டியவர் தமிழ்நாட்டுத் தலைமை அமைச்சர் சி. என். அண்ணுத் துரை என்று 'புது அரசியல் வல்லுநன்' (New Statesman) என் னும் செய்தித் தாள் எழுதியது. அம்மாநாடு அரசியல் ஊதியம் கருதிச் செய்யப்பட்ட முயற்சி என்று அறியாதார் கருதிட அக் கூற்று இடம் தருவதால், அத்தாளின் கூற்று ஏற்கத் தக்கதன்று. அம்மாநாட்டில் ஓர் ஊர்வலக்காட்சி அமைக்கப்பட்டது. அவ்வூர் வலத்தைக் காணத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்குக்கு வந்திருந்தவர்" கள் பேருந்துகளில் ஊர்வலமாகச் சென்னையின் பெருந் தெருக்களின் வழி அழைத்துச் செல்லப்பட்டனர். சாலைகளின் ஓரங்களில் நடை பாதைகளிலும், வீட்டு வாயில்களிலும் வீட்டுக் கூரைகளிலும், நின்றுகொண்டு இருந்த பெருந்திரளான மக்கள் வெளிநாட்டி விருந்து வந்திருந்த அறிஞர்களை ஊர்வலமாக வரும் அரசர்களை வர வேற்பதுபோல் மகிழ்ச்சி தெரிவித்து வரவேற்றது காணக் கிடைக் காத காட்சியாகும்.

இந்திபற்றித் தமிழர் நிலை: தமிழர் மொழியுணர்ச்சி, வங்காளி போன்ற மொழிகளைப் பேசுவோர் மொழியுணர்ச்சியி லிருந்து வேறுபட்டதா என இன்னும் கேட்கக்கூடும். ஏனெனில், வங்காளி மொழியை வங்காளிகள் விரும்புவதற்கு மேலாகத் தமிழைத் தமிழர்கள் விரும்புகிறுர்கள் என மெய்ப்பிப்பது கடினம். 1956-ஆம் ஆண்டு நடுவணரசு நிறுவிய ஆட்சிமொழிக் கட்டளைக்குழுவில் இந்திக்கு ஆதரவு தந்த பெரும்பான்மையினருக்கு எதிராகச் சிறு பான்மையினரின் அறிக்கையை எழுதிய இருவருள் ஒருவர் வங்காளி ஒருவர் தமிழர் அன்ருே? இந்திக்கு எதிராக இருவர் குரல்களும் ஒரேமாதிரி ஒலிப்பதைக் காணலாம். இந்தியின் புழக்கத்தைப் பரப்பும் முயற்சிகளுக்கு எதிராக இந்தியாவின் பல பகுதிகளிலும் கூறப்படும் தடைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியான கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவை எனபது குறிப்பிடத் தக்கது. இந்திய நாட்டின் மொழிகள் பல. எனவே இந்தி இந்தியாவுக்கு ஒரே நாட்டின் மொழி அன்று. அஃது அரசு அலுவலக ஆட்சி மொழிதான்; இன்னும் கூறப்போனுல் 'இணைப்பு மொழி''தான் என்று பேசுவது வழக்கம். பல நாட்டின மொழிகளுள் ஒன்றுக்கு மட்டும் சிறப்பிடம் அளித்தால் குடிமக்களுள் ஒரு சாராருக்கு "நடு நிலையற்ற ஊதியம்'' கிட்டும் என்பது இன்னொரு கருத்தாகும். (இந்தியாவில் ஆங்கிலத்தின் தரம் வங்காளம், தமிழ்நாடு, கேரளம்

ஆகிய பகுதிகளில் பிற பகுதிகளைவிட உயர்வாக உள்ளது என்றும், ஆங்கிலம் தொடர்ந்து இருந்தால் அப்பகுதிகளுக்கே ஊதியமாகும் என எதிர்த் தரப்பிலுள்ளவர் கூறுகின்றனர் !) இந்தியாவின் பெரிய வட்டார மொழிகளுள் ஒன்றுக்குச் சிறப்பிடம் அளிப்பதை எதிர்ப்போர் உள் மனத்தில் இதுவும் ஒரு காரணமாக இருக்கும் எனக் கூறலாமெனினும், எதிர்ப்புக்கு முக்கிய காரணம் அதுவன்று. (தமிழருக்குத் தம்) தாய்மொழியின்பாலுள்ள ஆழ்ந்த பற்றே மிக முதன்மையான காரணம் ஆகும். "இந்தி வளர்ச்சியடையாத மொழி ; எனவே நாட்டின் ஆட்சி மொழியாகத் தக்கதன்று" என்னும் கூற்றிலிருந்து இது தெளிவாகும். (அடிக்கடி கூறப்படும் இக்கருத்து ஏற்கக் கூடியதன்று. காரணம்: நுட்பமான சொற்றொகுதிகளை எவ்வளவு குறைந்த அளவுக்கு உடைய மொழியாக இருப்பினும் சரி, ஒரு மொழியை ஆட்சிமொழியாகப் பயன்படுத்தும் அந்தச் செயலின் மூலமாகவே ஆட்சிமொழியாகத் தக்க தகுதியை அது பெற்றுவிடும்) எனினும் இக்கருத்து எதைக் காட்டுகிறது என்றால் இந்தியைப் போல அன்றி வங்காளமும், தமிழும் "பெருமை மிக்க" மொழிகள் என அவ்வம்மொழி பேசுவோர் ஆழ்ந்த பூட்கை உடையவர்கள் என்பதைக் காட்டுகிறது. அவ்வம்மொழி இலக்கியங்களின் சிறப்புப்பற்றிய உறுதிப் பாட்டிலிருந்தே அப்பூட்கை எழுந்திருக்கும். எந்நிலைமை வந்ததனால் கேலிக் (Galic) மொழி இசுக்காட்லாந்தில் மறைந்ததோ, வெல்சு மொழி இங்கிலாந்தில் மறையும் நிலைக்கு வந்ததோ, அது போன்ற ஒரு நிலைமை தமது மொழிக்கு ஏற்பட அத்தகைய மொழிப்பற்றுள்ளர் ஒருப்படார். (தொடரும்.)

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகத்தில் சேர்வதற்கு விளக்கம் வேண்டியும், பங்குகள் கேட்டும் அன்பர்கள் பலரிடமிருந்தும் மடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இக் கூட்டுறவுக் கழகத்திற்கான அடிப்படை ஆக்க முயற்சிகளும், சட்ட நெறி முறை வரைவுகளும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முறைப்படி மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அதன்பின் விரிவான அறிக்கைகள் வெளிவிடப் பெறும். அதற்குள் தங்கள் பங்குத் தொகையினை விடுக்க விரும்பும் அன்பர்கள், தாம் எடுத்துக்கொள்ள விரும்பும் பங்குகளுக்கான தொகையுடன் சேர்ப்புக் கட்டணம் ஓர் உருபாவும் சேர்த்துத் தம் முழு முகவரியுடனும் விளக்கத்துடனும் 'தென்மொழி' சென்னை-5 என்னும் முகவரிக்கே விடுத்து வைக்கவும். ஒரு பங்கு ஓர் உருபா. ஒருவர் எத்தனைப்பங்குகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவையான பங்குகள் விரைந்து நிறைவாகி வருகின்றமையால் அன்பர்கள் முந்திக் கொள்வது நல்லது.

25—9—74
சென்னை-5.

பெருஞ்சித்திரன்.
அமைப்பாளர்.

—சுவடி 12 ஓலை 4-இன் தொடர்ச்சி.

இனம் போன்று இனம் அல்லார்.

—தமிழவேள்:

பம்பாயிலிருந்து வெளிவரும் ஓர் ஆங்கிலக் கிழமை ஏட்டில் முன் ஒருவர் ஒரு கட்டுரை எழுதி யிருந்தார். சென்னையில் ஓடும் பேருந்துகளைப் பற்றிய கட்டுரை அது. அந்தக் கட்டுரைக்கு அவர் ஆங்கிலத்தில் கொடுத்திருந்த தலைப்பு; "Pokkuvarathu is fun in Madras" என்பது. "போக்குவரத்து சென்னையில் வேடிக்கையாக இருக்கிறது" என்று அவர் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் கட்டுரையில், சென்னையில் ஓடும் பேருந்துகளில் திருவள்ளுவரின் திருவுருவப் படம் வைக்கப் பட்டிருப்பதைப் பற்றிக் கூறுகிறார். "சென்னையில் உள்ள பேருந்துகள் கண்ணாடிச் சட்டமிட்ட திருவள்ளுவரின் படத்தைத் தாங்கிச் செல்கின்றன. அந்தப்படம் ஓட்டுநரின் இருக்கைக்கு மேலே அவரைப் பார்த்த வண்ணம் வைக்கப்பட்டிருப்பது அவர் தம் எளிய தொழிலை எள்ளி நகையாடுவதுபோல் இருக்கிறது" என்கிறார். திருவள்ளுவரை அவர் 'புகழ்பெற்ற பாவலர்' என்று குறிப்பிடுகிறார். அப்படிக் குறிப்பிடுகின்றபொழுது, 'புகழ்பெற்ற'— 'பாவலர்' என்னும் இரு சொற்களுக்கிடையே வேறு இரண்டு சொற்களையும் சேர்த்துச் சொல்கிறார். அந்த இரண்டு சொற்களை அவர் அங்கே நுழைத்திருப்பதிலிருந்துதான் அவரை நாம் இனம் கண்டு கொள்ள முடிகிறது! 'புகழ்பெற்ற இரண்டாம் நூற்றாண்டுப் பாவலர் திருவள்ளுவர்' என்று கூறுகிறார். ஆங்கிலத்தில் அவர் எழுதுகிறார்:

> "Buses in Madras carry framed photographs of that famous 2nd centuary poet Tiruvalluvar, placed strategically above the driver's seat as though in mockery of the latters meek calling."

திருவள்ளுவர் இரண்டாம் நூற்றாண்டுப் புலவராம். சொல்பவர் யார்? ஆராய்ச்சியாளரா ? இல்லை: நகைச்சுவைக் கட்டுரையாளர். எந்த ஆண்டில் சொல்கிறார் ? திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டு வந்த அந்த ஆண்டில் சொல்கிறார் ! திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு விழா தமிழகத்தின் பல பகுதிகளில் கொண்டாடப்பட்டு வந்ததும், கொண்டாடப்படும் விழாக்களைப் பற்றிய தொகுப்பு நிகழ்ச்சிகள் வானொலியில் கூட ஒலி பரப்பாகி வந்ததும் அவருக்குத் தெரியாதா? தெரியும். இரண்

டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடாமல் 'புகழ்பெற்ற புலவர் திருவள்ளுவர்' என்று மட்டும் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தால் போதாதா ? போதும். பின்னே ஏன் அவர் அப்படிக் குறிப்பிடுகிறார் ? திருவள்ளுவரைப் பிற்பட்ட காலத்தவராகக் கூறுவதன் உட்கருத்து என்ன ? திருவள்ளுவரின் திருக்குறளுக்கு அடிப்படையாக இருந்தவை வடமொழி நூல்கள் என்று சொல்லவேண்டும் என்ற எண்ணந்தானே ? அப்படிப்பட்ட எண்ணம் உடையவரைத் தமிழர் என்று கொள்ளலாமா ?

"திருவள்ளுவர் இற்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முற்பட்டவர்; தொல்காப்பியம் இயற்றிய தொல்காப்பிய தேவர்க்கும் முந்தியவர்" என்பது அழகரடிகள் அவர்களின் கருத்தாகும். அக்கருத்துப்படி திருவள்ளுவர் கி. மு. ஐம்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

தனித்தமிழ் ஆர்வலர் திரு. கு. மு. அண்ணல் தங்கோ அவர்கள் திருவள்ளுவரை கி. மு. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கொண்டு திருவள்ளுவரின் தொடர் ஆண்டைக் கி. மு. 556-இலிருந்து கணக்கிடுகிறார். அவர் தம் கருத்துப்படி இந்த ஆண்டு தி. பி 2525 ஆகும்.

திரு. கோ. நிலவழகனார் (இராமச் சந்திரனார்) அவர்களும் திருவள்ளுவரின் காலம் கி. மு. 5-ஆம் நூற்றாண்டு என்றே கொள்கிறார். "சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பாவியங்களிலும், தொகை நூல்களாக விளங்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியவற்றிலும் குறட் கருத்துகள் எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே தொகை நூல் பாடல்களுக்குக் காலத்தால் முற்பட்டது திருக்குறள் என்பது வெள்ளிடை மலையாம். அஃதாவது கி. மு. 3-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பது தெளிவு...சந்திரகுப்த மோரியன் கி. மு. 350 முதல் 301 வரை வடநாட்டில் ஆட்சிபுரிந்தான். அவனுடைய காலத்தவனாகக் கருதப்படுபவன் கௌடிலியன். அவன் அருத்த சாத்திரம் என்னும் பொருள் நூலை வடமொழியில் இயற்றியிருப்பவன்; அவன் தன்னுடைய நூலில் திருக்குறள் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பல விளக்கங்களைத் தந்துள்ளான் — இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் திருக்குறள் கௌடிலியனுடைய பொருள் நூலுக்கும் காலத்தால் (கி.மு. 400-க்கு) முற்பட்டது என்பது வெளிப்படுகிறது, அஃதாவது கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே திருக்குறள் இயற்றப்பட்டிருக்கலாம்"—என்கிறார்.

திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு ஆராய்ச்சி முன்னுரை எழுதி வெளியிட்டுள்ள திரு. கந்தசாமியார் அவர்கள் திருவள்ளுவருடைய காலம் கி. மு. 3-ஆம் நூற்ருண்டு என்கிருர்.

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" —(குறள். 100)

என்னும் குறட் கருத்தைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடிய ஆலத்தூர்கிழார் என்னும் புலவர் தமது பாடல் ஒன்றில்,

"நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்ருேர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ"; —(புறம்-34)

என்று எடுத்தாண்டிருக்கிருர்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக் கேட்ட தாய்" —(குறள்-69.)

என்னும் குறட் கருத்தை, காக்கைபாடினியார் என்னும் புலவர் தமது பாடல் ஒன்றில்,

"ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே" —(புறம்-278)

என்று அமைத்துக் காட்டி யிருக்கிருர். கிள்ளி வளவன் காலம் கி. பி. 2-ஆம் நூற்ருண்டின் முற்பகுதி; காக்கைபாடினியார் காலம் கி. மு. முதல் நூற்ருண்டின் பிற்பகுதியெனத் திரு. கே. என். சிவராச (பிள்ளை) அவர்கள் கருதுகின்ருர்கள். காக்கைபாடினியார் ஆலத்தூர்கிழார் ஆகிய புலவர்கள் காலத்துக்கு மிக முற்பட்ட காலத்தே திருக்குறள் தோன்றியிருத்தல் வேண்டும். கௌதம புத்தர் கொள்கைகளைத் திருவள்ளுவர் கண்டிக்கிருராகலின் திருவள்ளுவர் புத்தர் காலத்துக்குப் பிற்பட்டுத் தோன்றிக் காக்கைபாடினியார் காலத்துக்கு முற்பட்டு வாழ்ந்துள்ளார் எனப் பெறப்படுகிறது. ஆகவே திருவள்ளுவர் காலம் கி. மு. மூன்ரும் நூற்ருண்டெனக் கொள்ளின் அது மெய்யாகும் என்கிருர் அவர்.

இவ்வாறு திருவள்ளுவருடைய காலத்தைப் பற்றிய பல்வேறு முடிவுகளை ஆராய்ச்சியாளர்கள் கூறியிருப்பினும், மறைந்த பேராசிரியர் திரு. மறைமலையடிகள் அவர்களின் கருத்துப்படி திருவள்ளுவர் கி. மு. முதல் நூற்ருண்டைச் சேர்ந்தவர் எனக்கொண்டு திருவள்ளுவர் தொடர் ஆண்டை கி. மு. 31-லிருந்து கணக்கிடுவதைத் தமிழகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் திருவள்ளுவரின் தொடர் ஆண்டை மறை

மலையடிகள் கணக்கிட்டுக் கூறியபடியே தாளிகைகள் பலவும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. அழைப்பிதழ்கள் பலவற்றிலும் இந்தத் தொடர் ஆண்டைத் தமிழ் மக்கள் குறிப்பிட்டு வருகின்றனர்.

உண்மை இங்ஙனம் இருப்ப, மேலே குறிப்பிட்ட அந்த ஆங்கிலக் கட்டுரையாளர் திருவள்ளுவரை கி. பி. 2-ஆம் நூற்றாண்டுப் புலவர் என்று கூறுவானேன் ? நகைச்சுவையாகக் கட்டுரை எழுதுபவர் திருவள்ளுவரின் காலம் 2-ஆம் நூற்றாண்டுதான் என்று முடிவு கட்டியவர் போல் எழுதுவானேன்? 'போக்குவரத்து' என்னும் தமிழ்ச் சொல்லை அப்படியே ஆங்கிலத்தில் "Pokkuvarathu" என்று கட்டுரைத் தலைப்பில் குறித்திருப்பவர், 'திருவள்ளுவரைப் பிற்காலத்துப் புலவராகக் காட்டுவானேன்?' முகத்தே இனிமையாக நகைப்பினும் "அகத்தின்னா வஞ்சர்" அவர் என்பதைத்தானே அவர்தம் குறிப்பு வெளிப்படுத்துகிறது.

"தோற்றத்தில் நம் இனத்தவர் போலவே இருந்தாலும் சிலர் உண்மையில் நம் இனத்தவராக இருப்பதில்லை. இனம் போன்று இனம் அல்லாதவர்களாக இருக்கும் அவர்களுடைய நட்பு பொது மகளிருடைய மனத்தைப்போல் உள்ளொன்றும் புறமொன்றுமாக வேறுபட்டே இருக்கும்" என்கிறார் திருவள்ளுவர்.

"இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்." —(குறள்-822)

பொது மகளிர் யாவரிடத்திலும் மிகுந்த அன்பு காட்டுவது போல்தான் பேசுவார்கள்; பழகுவார்கள். ஆனால் அவர்களுடைய அன்பு உண்மையானதாக இராது ; உள்ளன்பாக இராது. பிறரிடமுள்ள பொருளைப் பறிக்கும் நோக்கமுடையதாகவே இருக்கும். இனம் போன்று இனம் அல்லாதவர்களும் தங்கள் தாய்மொழியிடத்திலும் தாய் நாட்டினிடத்திலும் மிகுந்த பற்றுடையவர்கள்போல்தான் பேசுவார்கள்; எழுதுவார்கள். ஆனால் அந்தப் பற்று உண்மையானதாக இராது; உள்ளத்தோடு ஒட்டியதாக இராது. தாய்மொழியைத் தாழ்த்தி தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நோக்கமுடையதாகவே இருக்கும்.

திருவள்ளுவர் குறிப்பிடும் அந்த "இனம் போன்று இனம் அல்லார்" உலகத்தில் பிறநாடுகளில் இருக்கிறார்களோ இல்லையோ நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகவே இருக்கின்றது. O

மறைமலையடிகளாரின் செய்யுள் மாண்பு !

—பெருஞ்சித்திரன்.

இனி, அவர் தாபதநிலையாக எழுதிய பத்துப் பாடல்களும் ஆசிரியர் சோமசுந்தரர் தம் மனைவியார் கரைந்தழுத காட்சியாகத் தீட்டப் பெற்ற உயிரோவங்கள். அப் பாடல்களைப் படிக்குந் தொறும் படிக்குந்தொறும் அவ்வம்மையார் தங் கணவரைப் பிரிந்து கதறியழுங் காட்சி நம் கண்முன் வந்து நெஞ்சம் நெகிழ்க்கக் காண்போம்.

அரைசே எனுமால்; அருளே எனுமால்;
உரைசேர் புகழாய் உடையாய் எனுமால்;
தரைநீ ஒருவன் தகுமோ எனுமால்
குருவே எனுமால் துணைநின் மனையே!

—என்றவாறு குருவின் துணை கதறுதலைத் தங்குரலில் ஏற்றி உணர்வு பொங்க வெளிப்படுத்தியிருக்கும் அடிகளின் பாடல் திறன் செழுமை சான்றது.

'தங்கள் மனைவியின் துயரத்தைக் கண்டு கடலுங்கூட கதறி ஓலமிடுகின்றது ; கருங்கல்லும் கூட உருகுகிறது ; மடல்களை அவிழ்த்து நிற்கும் செடிகளின் கண்களாகிய மலர்களிலும் நீர் மல்கிச் சொரிகின்றது; வலிமை மிக்க மரங்கள் கூட மெழுதுபோல் அந்த அம்மையாரின் துயரங்கண்டு உருகுகின்றதே! வீரம் மிகுந்த அரிமாவையொத்த பெருமை பொருந்திய தாங்கள் இவற்றை அறிகிலீர் போலும் உள்ளீரே ! என்னே இத்தன்மை!'—என்று அம்மையாருக்காகத் தம் ஆசிரியர்பால் கதறியழுகின்ற காட்சி; குறைந்த சொற்களால் கீழ்வருமாறு காட்டப் பெறுகின்றது.

கடலோ கரையும் கருங்கல் உருகும்
மடலார் மலர்க்கண் மலிநீர் சொரிய
மிடலார் மரமும் மெழுகாய் உருகும்
அடலே றனையாய் அறியா யிதுவோ !

—இத்துணை யழுங்கல் புலப்படுமாறு எடுத்துக் கூறியும் நிறைவுறாத அடிகளாரின் நெஞ்சம், மீண்டும், "குருவே, தங்களைப்பிரிந்து அவ் வம்மையார் கதறும் அவல நிலையை எடுத்து எம்மால்,

"மொழியப் படுமோ, முனிவா, மனையின்
கழியாத் துயரம்"

—என்று கேட்டுத் துடி துடிக்கின்றது.

தம் ஆசிரியர் பிரிவின்மாட்டுத் தாம் பட்டுழன்ற துயருக்குப் பின்னர், தம ஆசிரியரின் துணவியார் அழுங்கிய துயரைப் பின் வைத்துப் பேசிய பான்மையை ஓராது, அடிகள் நூலின் வைப்பு

முறையில் நிறைவுறாத பொய்ப்புலவோர் சாற்றிய குறைக்கு நிறைவாக, அடிகளே தாபதநிலை விளக்கத்தில், ''எம்மாசிரியர் பிரிவுறுதலால் எம்மிடத்தே தோன்றிய கையறவு எமக்குப் பெரிதாய்த் தோன்றும் எமதுளம் நிகழ்ச்சிபற்றிக் கையறு நிலையை முன்வைத்து, அதன் பின்னர் தாபத நிலையை வைத்தாம்''—என்று விடையிறுப்பர்.

இனி, அடிகளார் எழுதியதாக நமக்குக் கிடைத்துள்ள 'புள்ளிருக்கு வேளூர்ப் பதிகம்', வைத்தீசுவரன் கோவிலில் உள்ள இறைவனைப் பாடிய இருபது பாடல்களாம். 'பதிகம்' என்னும் சொல் பத்துப் பாடல்களையே குறிக்குமேனும், அடிகளார் அத்தலத்திறைவன் இறைவி மேல் வைத்த மீதூர்ந்த பத்திமையால் இருபத்தாகிய இரண்டு பதிகங்களை எழுதினார் போலும்!

பாடல்கள் இருபதும் உள்ளமுருக்கும் தெள்ளுதமிழில் பத்திச்சுவை பொதுள எழுதப் பெற்றவை. முதற் பத்துப் பாடல்கள் தரவு கொச்சகக் கலிப்பா வினத்திலும்; இரண்டாம் பத்துப் பாடல்கள் அறுசீர் நிலைமண்டில யாப்பிலும், கருத்துக்குத் தக இன்னோசை கெழுமி இயன்றிருக்கும் செவ்வி; நெஞ்சினுள் இறைமைச் சிலிர்ப்பை யூட்டுவதாக வுள்ளது.

'எழுத்தாகவும்; எழுத்துகள் அடங்கிய சொல்லாகவும், சொல்லின் உள்ளே பழுத்த பொருளாகவும் உள்ளவனும், பலவகையான பிணிகளில் துன்புற்றுப் புழுத்தேனுகிய எனக்கு அருள் செய்தவனும், புள்ளிருக்கும் வேளூரில் செழித்து நிற்பவனும் ஆகிய இறைவனை—சிவ ஒளியை—என்னுள்ளத்துக்குள் சேர்த்துக்கொண்டேன்''—என்னும் பொருள் தருகின்ற பாடலை ஒருமுறை பாடி அதன் சுவையைத் தெளிமின்கள்!

எழுத்தானை எழுத்தான சொல்லானை எழுஞ்சொல்லிற்
பழுத்தான பொருளானைப் பல்பிணியிற் பட்டுழன்று
புழுத்தேனை யருள்செய்த புள்ளிருக்கு வேளூரில்
செழித்தானைச் சிவவொளியை என்னுளத்தே சேர்த்தேனே!

—இப்பாடலுள் கிளர்ந்தூறும் நல்லுணர்வும், அலர்ந்தவிழும் இறையன்பும், திருவாசகத் தேன்போல பத்திச்சுவை பிலிற்றிப் பயனிறைக்கும் பான்மையுந்தாம் என்னே!

மாணிக்க வாசகரின்,

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்திருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லைகண்டேனே.

—என்னும் கண்டபத்தின் பாடலைப் போன்று உள்ளம் நெகிழ்விப்பதாயுள்ளது இப்பாடல்!

இனி,

"எக்காலும் நினைந்துருகும் எளியேனுக் கிடர்புரிந்தால்
புக்கெங்கு நின்றிடுவேன்............"

—என்று இறைவனைப் புக்கிடம் கேட்கும் பான்மையும்,

'எள்ளிருக்கும் நெய்போல் எங்கிருக்கும் எம்பெருமான்
புள்ளிருக்கும் வேளூரில் பூவிருக்கும் மணம்போல
உள்ளிருக்கும் ஆதலினால் உளமுருகி யன்பென்னும்
கள்ளிருக்கச் சொல்லுமவர் கன்றியநோய் காணாரே!'

—என்று தன் துன்பத்தை அவர் கண்டு மனம் இரங்காத் தன்மையினையும் குறிக்கும் பாடல்கள் எல்லாம் அடிகளாரின் சொல்லாட்சித் திறனுக்கும், பாடல் யாக்கும் உணர்வுக் கொழுமைக்கும் ஏற்ற சான்றுகளாய் என்றும் நின்று இலங்குவன.

இனி, இரண்டாம் பதிகத்துள்வரும், அறுசீர் நிலைமண்டிலப் பாக்களெல்லாம் தேன்கட்டிகள் போல் நாவிலும் நெஞ்சிலும் இனிப்பவை; உள்ளுயிரைக் கிளர்வுறச் செய்பவை; பிறவியை மலர்த்துபவை. ஓரிரு பாடல்களைப் பாருங்கள் :

முகிலின் தொகுதி சடையாக
  முழுகு சுடரின் பாயொளியே
தகுநின் வடிவின் உருவாகத்
  தயங்கு சுடரே முகனாகப்
புகுவெண் பிறையே நின்சடைமேல்
  பதியும் பிறையாய்ப் பணிமாலை
புகுமென் னுளத்திற் புள்ளிருக்கும்
  வேளூர்ப் புகுந்த பொதுமுதலே!

கள்ளம் அறியாப் பிள்ளைமையில்
  காழிப் பெருமான் கண்டுரைத்த
தெள்ளும் உனது திருவுருவே
  தேருந் தோறும் தெளிவுருவாய்க்
கொள்ளும் அடியேன் கண்காணக்
  கூடா தென்றோ கல்வடிவில்
புள்ளும் இருந்து வழிபட்ட
  வேளூர் தன்னில் புகுந்ததுவே!

—பாடல்கள் ஒவ்வொன்றும் ஓசைநயமும், சொன்னயமும், பொருள் சிறப்பும் பொருந்தியது. அடிகளாரின் புலமைத் திறனுக்கு இப்பாடல்கள் என்றும் சான்று நிற்கும் வல்லமை உடையன. பாடல்களின் முழுச் சுவையினையும் வேட்கும் மனக்கிளர்ச்சி யுள்ளவர்கள் மூலத்தினையே கண்டு நிறைவுறுக.

அடுத்து; அவரின் திருவருளியல்பு கூறி நெஞ்சறிவுறுத்தல் என்னும் நெடுந்தொடர்ப் பாடலைப் பார்ப்போம். இப்பாடல் 216 வரிகள் கொண்ட அகவல் யாப்பில் அமைந்தது. அடிகளாரின் 'ஞானசாகரம்' தொகுதி 1 (1902) இல் தொடர்ந்து வெளிவந்தது.

—(தொடரும்.)

மக்களவை

ம:201: என்ன தாளிகை வாங்குகிறீர்கள்?

அன்புடையீர்,

வணக்கம். 'ஆரியப் பார்ப்பனர்களின் அளவிறந்த கொட்டங்களை' எவ்வளவு 'வெளிச்சம்' போட்டுக் காட்டினும் இத்தமிழன் ஏதும் அறியான் போலவே இருக்கிறானே' என்று மனம் நொந்து கொண்டிருந்த வேளையில் அன்பர் ஒருவர் அறிமுகம் ஆனார். அவரை 'என்ன தாளிகை வாங்குகிறீர்கள்' என வினவியபோது, 'துக்ளக்' வாங்குகிறேன்' என்றார். 'ஐயா! அவ்விதழ்கள் எல்லாம் இன்று தமிழனின் மூளையை வெளுப்புச் செய்ய எழுந்தவை" என்று கூறிய போது, அன்பர் மறுத்தார். நீங்கள், 'பெரியார் கட்சியா?' என்றும் கேட்டார். 'ஐயா! நாங்கள் தென்மொழிக்காரர்கள்' என்று அறிமுகப்படுத்திக்கொண்டு நீண்டதொரு விளக்கம் அளித்தேன். (தென்மொழியையும் அதன் பணியையும் குறித்து)

ஒரு நாட்டை அடிமைப்படுத்த வேண்டும்; நாட்டு மக்களை என்றென்றும் அடிமைகளாகவே வைத்திருக்க வேண்டுமெனில் முதலில் அவர் மொழியை அழிக்கவேண்டும். இதை ஆரியர்கள் நன்றாகக் கடைப்பிடித்தனர்; பிடிக்கின்றனர். இதை இன்றைய ஆரியப் பார்ப்பனர் நடத்தும் இதழ்களைக் கொண்டே அறியலாம்.

தினமணி, சுதேசமித்திரன், தினமலர் இவை அவர்களின் நாளிதழ்கள். (ஆங்கிலத்தில் 'இந்து"வும் 'எக்சுபிரசும்") இவைதவிர தினமணிக் கதிர், கல்கி, ஆனந்த விகடன், அமுதசுரபி, குமுதம், கலைமகள், கணையாழி, தீபம், துக்ளக், மஞ்சரி, தியாகபூமி, சுயராச்சியா, கோகுலம் முதலிய அனைத்தும் ஆரிய இதழ்களே.

1. இவற்றில் ஓரிரண்டு இதழ்கள் தவிர அனைத்தும் ஆரியப் பெயர் தாங்கியவை.

2. பெயர்கள்தாம் தமிழில் இல்லை என்றால் உள்ளே தமிழ் எழுத்துகளின் இடையே, வடமொழி எழுத்துகளையும் ஆங்கில எழுத்துகளையும் கலந்து எழுதி இருப்பர்.

3. இனி சொற்களின் இடையிடையே வேண்டா இடங்களில் எல்லாம் வேற்றுமொழிச் சொற்களைப் பெய்திருப்பர்.

'தென்மொழி' 'சுவடி, ஓலை' என்றும், 'செந்தமிழ்ச் செல்வி', 'சிலம்பு, பரல்' என்றும் எழுதினால் நேற்றுத் தோன்றிய 'துக்ளக்' Vol...No என்றே எழுதும், திங்கள் ஈரிதழ் என்று எழுதாது; Tamil Fortnightly என்றே எழுதும், 'ட்ராFக் ஆFஸில் விஸிட்டர்' என்று எழுதித் தமிழைக் கொல்லும். ஏனெனில், தமிழில் 'F' இல்லையாம் இந்த 'விழிப்'பெயர் அறிஞருக்கு. இந்த 'அறிஞன்' 'துக்ளக்' என்பதை மட்டும் ஆங்கிலத்தில் THUGLAK என்று முதல் 'க்' கிற்கு 'G' ஐயும், பின்வரும் 'க்' கிற்கு K ஐயும் போடுவது என்ன முல்லை மாறித்தனம்? துக்ளக்கிற்கு எழுதுபவன்கூட 'அந்தத் துரை மகனை, 'டியர் மிஸ்டர் துக்ளக்' என்று அழைக்கவேண்டுமாம். ஒரு பக்கம் இந்திரா காமராசர் இணைப்பைப் பெரிதுபடுத்தி அதற்கு நயன்மை கற்பித்து, அவர்கள் இணைவதே நாட்டிற்குப் பெரும் ஊதியம் என்று கூக்குரல். மறுபக்கம் இராணி அம்மையார் தி. மு. கழகத்தில் சேர்ந்தது குறித்து உலகமே அழிவதுபோல் ஊளை. இந்தி எதிர்ப்பில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு அரசு உதவுவது குறித்து வக்கணை. இன்னபிற......இன்னபிற நீக்கமற இருக்கும்.

இனி, பார்ப்பனர் எழுதும் கதையின் பெயர்கள் தமிழில் இருக்காது. (சார்ட்டேன் டைப்ரைடிங் என்றோ, சிகிச்சை என்றோ, லங்காரி என்றோதாம் இருக்கும்). அம்மட்டோ! கதையுறுப்பினன், ரசேசு, பிரேம், சுரேசு, சுனில், ஆனந் என்றும், பெண்ணாய் இருப்பின், சுதா, லதா, சில், விசி என்றுமே இருக்கும். (அவ்வளவு ஏன்? இவர்கள் எழுதும் பள்ளிப் பாட நூல்களில் வரும் எடுத்துக் காட்டுப் பெயர்கள்கூட இராமன், சீதை அதைவிட்டால் இலக்குமணன் என்றவாறே இருக்கும்.) இவர்களின் இதழ்களில் (இவைதாம் குமுகாயம் முழுதும் மேலாண்மை செலுத்தும் விற்பனை மிக்க இதழ்கள்) ஒருபால் 'ஆடை உரித்த படங்கள்' இருக்கும், (அவர்கள் 'பாணி'யில் தோரகாவோ என்ன இழவோ.) அடுத்து, 'கல்லுச்சாமிகள்' ஆடையுடுத்து 'புனிதப் பயணமோ' 'புண்ணிய பாரதமோ' புறப்படும். அடுத்த கிழமை 'ஆபாசம்' எதுவென 'கவர்ச்சி நடிகை'யிடம் நேருரை. எப்படி!

இவர்கள் எழுதும் கதைகளுக்கு வழக்கப்படி காமகோடியின் அளப்போ, பாரத, இராமாயணத்தின் வரிகளோ அன்றி இன்றையப் பார்ப்பனக் குஞ்சு ஏதாவது கிறுக்கிய கிறுக்கற் கதையின் ஓரிரு வரி

களோ, 'பிள்ளையார் சுழி'யாக விருக்கும். காட்டாக, தினமணிக் கதிரில் இலா. சு. ரங்கராசப் பாப்பனன் 'மாலினி நீ எங்கே" என்று ஒரு கதையில் தேடுகிறுன்: இவ்விருபதாம் நூற்றுண்டு 'இப்பி' நாகரிகத்தில் அவருடைய 'பிள்ளையார் சுழி' எங்குத் தொடங்குகிறது பாருங்கள் .

''நிறமே இல்லாத பிரம்மத்திலிருந்து செக்கச் செவேல் என்ற பிரம கருணையின் நிறத்தோடு, உதயசூரியன் மாதிரி, மாதுளம் பூ மாதிரி, குங்குமப் பூ மாதிரி, செம்பருத்திப் பூ மாதிரி, காமேசுவரியான காமாட்சி, அநுக்கிருக நிமித்தம் தோன்றி யிருக்கிருள்."

சகத்குரு சிரி காஞ்சி காமகோடி சங்கரன் சுவாமிகள் 'கல்கி'– இதோ: துக்ளக்கின் 'வந்தே மாதரம்' என்னும் கதைக்குப் 'பிள்ளை யார் சுழி",

''சேதாரம் சனதா மனுதே மேதாவினம் I
சிதம் கி சடம்மனுதே ப்ரக்கு திசுவ பாவாத்" II

எப்படி! இனம் இனத்தோடு சேரும் பண்பு, [அர்த்த சாத்திரம்]–நேற்றுத் தோன்றிய கோகுலத்தைப் பாருங்கள். அதன் உரிமைப் படமான 'பிள்ளையார் முருகனைப் பாருங்கள், அதற்குக்கூட 'அழகான பூணூல்' போட்டிருப்பார்கள்!

அன்றன்று நடுநிலையாளர்கள் போல் 'நேருரை' என்ற பெயரால் கோவில் மொழி எது? சமற்கிருதம் வேண்டுமா? இந்தி வேண்டுமா? பயிற்றுமொழி தேவையா? என்ற கேள்விகளை எழுப்பிக்கொண்டு தம் இனத்தவர் இருவரிடமும் அவர் அடி ஒட்டிய குஞ்சுகளிடமும் 'பேட்டி' கண்டு வெளியிடுவார்கள். அறிஞர்களும், கலைஞர்களும் 'அக்கிரகாரத்தினர்'தாம் என்ற அளவில் அவாளின், 'அளப்புகள்' இருக்கும். 'அறிமுகம்' என்ற பெயரில், 'கால்போன போக்கில்' கோவில், குளம், மடம், பாரத, இராமாயணப் பட்டி மண்டபங்கள் பரத நாட்டிய மேடைகள், 'கர்நாடக சபாக்கள்', 'இந்திப் பிரச்சார சபைகள்' சென்று அவாளின் செய்திகளை 'மரத் தமிழன்' மூளையில் ஏற்றுவார்கள்,

ஒருபால் வாரியார்; மறுபால் ஆலிவுட் அம்மணம். தெய்வீகப் பெரியவாளும் சின்னவாளும் ஒருபுறம் மின்னும்; மறுபுறம் 'பிளே பாய்' விடைகளும், 'அந்தரங்க பதில்'களும் தமிழ்ப் பண்பைத் தின்னும்!

ஆக இப்படியெல்லாம் 'தமிழன் மொழி, இனப் பண்பாட்டு, நாகரிக வளர்ச்சியைக் குலைப்பவர்களை நாம் வளர்க்கலாமா?' என்று அன்பரைக் கேட்டேன். அவர் அதுநாள் வரை இவ்வளவு ஆழமாக ஒரு செய்தியைக்கூட நோக்கவில்லை என்றும், மேற்கூறிய அனைத்தும் தமக்கு ஒரு புத்துலகையே காட்டுகிறது என்றும், இனிமேல் அவ்விதழ்களைத் தாம் கையாலும் தொடுவதில்லை என்றும்; தம் நண்பர்களைக்கூட வாங்கவேண்டா என்று கேட்டுக் கொள்வதாயும் கூறி என் மனங்குளிர்வித்தார்: இன்னும் திருத்தப்படவேண்டிய தமிழர் தொகை—ஆரிய மயமாக்கப்பட்ட தமிழர் தொகை—எவ்வளவோ?

'கெடல் எங்கே தமிழர் நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்வோம்'.

—துரை-மடங்கன், பூளைமேடு. கோவை.

ம: 202: இது தமிழ் நாடா?

பெங்களூரிலிருந்து தற்காலிகமாகச் சென்னையில் தங்கி படிக்க வந்த எனக்கு, இங்குள்ள பல வணிகக் கடை விளம்பரங்களைக் கண்டபோது, நாமிருப்பது சென்னையா அல்லது இலண்டன் போன்ற நகரின் ஒதுக்குப்புறப் பகுதியா என ஐயமாக உள்ளது. எங்கெங்குக் காணினும் (தமிழக அரசு அலுவலகம் தவிர) ஆங்கிலப்பெயர் மட்டுமே அமைந்த பெயர்ப் பலகைகள்! அரசியல் விடுதலை பெற்று இருபத்தெட்டு ஆண்டுகளாயினும், அந்தப் பழைய ஆங்கிலமொழிப் பலகைகளின் ஒரு மூலையில்கூட சிறிய அளவிலேனும் கல்தோன்றி மண் தோன்றும் முன்னர் தோன்றிய மொழி காட்சி தரக்காணேம்: சென்னை மாநகரை கடந்த ஆண்டுகளில் ஆட்சி செலுத்தியவர்கள் 'வருகைப் பதிவு' ஊழலில் சிக்கிக் கம்பி எண்ணிய செய்தியினை ஆங்கிலப் பெயர்ப் பலகைகளோடு இணைத்துப் பார்த்தபோது, இத்தனை ஆண்டுகள் மாநகர மன்னர்கள் தமிழுக்குச் செய்துள்ள சிறப்பான இப்பணி மிகத்தெளிவாக விளங்கியது.

பெங்களூரில், இங்குள்ளது போன்றே வெறும் ஆங்கிலம் மட்டும் விளம்பரப் பலகைகளில் இருந்த நிலையை மாற்றி அமைத்த வரலாறு மிகச் சுவையானதாயும், நமக்குப் படிப்பினை ஊட்டுவதாயும் அமைந்துள்ளது. "கன்னடப் போராட்டக்காரர்கள்" (சளுவளிகாரரு) என்போர் ஆங்கிலத்துடன் கன்னடமும் இடம்பெற இறுதிநாளைக் குறித்து, அதற்குள் கன்னடம் பெயர்ப்பலகைகளில் இடம் பெறுவிடில், கல்மாரி பொழியலாம் என அன்பு வேண்டுகோள் விடுத்தனர். திடுமென அந்த இறுதி நாளுக்குப் பின்னர் எங்ஙணும் ஆங்கிலம், கன்னட

மெனக் காட்சியளித்தது. அத்துடன் இன்னென்றையும் இங்குள்ளவர்-கள் கருதிப் பார்க்கவேண்டும்.

இவன் தமிழன், இவன் சீனன், அவன் சப்பானியன், செருமானியன், ஆங்கிலமொழியான் என்பதையெல்லாம் உணர அவர்களுடைய பெயர்களைக் கேட்டாலே போதும். எடுத்துக்காட்டாக, அன்பழகன் என்பவன் தமிழனுகவும், சூஎன்சிங் சீனனுகவும், டனுகா என்பவன் சப்பானியனுகவும், பிளாக் ஆங்கிலமொழிக்குச் சொந்தக்காரனுகவுமே இருப்பர். பொதுவாக இவ்வாறு அமைந்தால் மட்டுமே அவன் தன் மொழி, நாடு மீது பற்று ஆர்வம் கொள்ள வழியுண்டு. இதுவே உண்மையாயிருக்கவும், நம் அருமைச் சென்னை மாநிலத்தை எடுத்துக் கொண்டு, இங்குள்ளோர் பெயரினைக்கேட்டால் அதில் 100-க்கு 90 தமிழல்லாத மொழியாக அல்லவா உள்ளன. என்னே வியப்பு?

சற்றேறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்து, பிறருக்கு அறிவுரை கூறுவதற்கு முன்னர் தாம் வேதாசலம் என்னும் வடமொழிப் பெயரினை மறைமலை எனத் தமிழ்ப்பெயராக மாற்றிக்கொண்டு, நமக்கெல்லாம் வழிகாட்டிய பின்னரும், இன்றும் 100-க்கு 90 பேர் தமிழன் என்ற உணர்வு ஒரு துளி கூட இல்லாமல் உள்ளார்கள் என்ருல் இதற்கு யார் பொறுப்பு? தமிழ், தமிழ் எனப் பூசணிக்காய் அளவு கூறி, கடுகளவேதான் செயல்பட்டு வருகின்றனர் நம் அரசியல் தலைவர்கள்!

எடுத்துக்காட்டாக, 'சென்னை மாநில'' அமைச்சர் அவையில் தமிழ்ப்பெயர் தாங்கியோர் எத்தனைப்பேர் உள்ளனர் என்பதையும், வடமொழிப் பெயரினர் எத்தனைப்பேர் உள்ளனர் என்பதையும் காணலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறுதான் பதம் என்பதுபோல, நெடுஞ்செழியன், அன்பழகன், மாதவன் ஆகிய மூன்றுமே தமிழ்ப் பெயர்கள்.

இராமன், இராமச்சந்திரன், இராசாராம், இராசாங்கம், ஆதித்தன் எனும் பெயர்களும், சிறப்பாக, இன்றைய தமிழக முதல்வர்—இந்தியை முழுமூச்சுடன் எதிர்த்தவர்—இன்றும் ஓரளவு எதிர்ப்பினைத் தெரிவித்து வருபவர்—கொண்டுள்ள 'கருணாநிதி' என்னும் பெயரும் அயல்மொழிப் பெயர்கள் அல்லவா?

தி. க.-வினர் இன்றைய நிலையில் இராமனை எரிப்பதைவிட, இராமனின் பெயரை அவர்களுடைய கழகத்தார் நீக்கி அதற்கு மாருக தமிழ்ப்பெயர் வைத்துக்கொண்டாலேயே, ''இராமன்'' மீண்டும் காட்டுக்குப் போய்விடுவான் என்பதனை உணர்தல்வேண்டும்.

சென்னையில் எப்போதோ கட்டப்பட்ட மர்மலாங் பாலத்தை, மறைமலையடிகள் பாலம் என்று பெயர் மாற்றிவைத்த பின்னரும், பெயர் மாற்றம் செய்தவரின் பெயர் எந்த மொழியிலுள்ளது? இந்த அடிமைத்தனத்தை நீக்க மனமின்றி, அவனுக்கு அறிவுரை, இவனுக்கு விழா என்றெல்லாம் இருப்பது எந்த நிலையில் நின்று பார்த்தாலும் பொருந்துவதாக இல்லை. (தமிழ்த் திரு. மறைமலையடிகளாரின் பெயரை வைத்தது குறித்து மகிழ்ச்சியே எனினும், இங்கு எண்ணுவதெல்லாம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவே என்பதனை உணர்க.) இதற்கெல்லாம் ஒரேவழி—நம்மை நாமே தமிழ்ப் படுத்திக் கொள்வதைத் தவிர வேறில்லை,

நம் இன்றைய முதல்வரிடம் உள்ள நாவன்மை உட்பட அனைத்துத் திறமைகளும் தமிழ் வயலுக்குப் பாய்ச்சப்பெறல் வேண்டும். வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னரே இதுபற்றி நல்ல முடிவு எடுத்து "தமிழர்—தமிழ்ப்பெயர் தாங்கும் ஒரு விழா"ப்போலும்கூட கொண்டாடச் செய்தல் வேண்டும்.

கருணாநிதி சட்டப்படி அருட்செல்வம் எனப் "பதவியில் உள்ள போது" மாற்றிக்கொண்ட மறு நொடியே, தில்லி வானொலி முதல், அமெரிக்கா, ஆசுத்திரேலியர்களின் ஒலிபரப்பு நிலையங்கள் ஈறாக இதனை உலகுக்கு அறிவிக்கும் என்பதனையும், இஃது உறுதியாக மாநிலத் தன்னாட்சிக்கு வித்து என்பதனையும் உணர்தல் வேண்டும். ஆட்சிப் பீடத்தில் இருக்கும்போதே நம் முதல்வர் தமக்குள்ள தமிழ்ப்பற்றை உலகுக்கு உணர்த்த இதனைக் கட்டாயம் செய்தல்வேண்டும்.

ஒரே நாளில் எத்தனையோ இலக்கங்கள் உள்ள கட்சி நேயர்கள் பல ஆயிரக்கணக்கில் தமிழ்ப்பெயர் தாங்கும் அன்றே, இந்த "சென்னை மாநிலம்!" தமிழ்நாடு என அழைக்கப்பெறுவதன் பொருளையும் பெறும், இந்த அடிப்படைச் செயல்களைச் செய்யாமல், திடுமெனக் கோயில்களில் தமிழ், குளங்களில் தமிழ் என்றெல்லாம் நாம்செப்பப்படுத்தும்போது அஃது இங்குள்ள தமிழரான "இராமசாமிக்கும், கிருட்டிணமூர்த்திக்கும்" எப்படிப்புரியும், என்பதனை எண்ணிப் பார்த்தல்வேண்டும்-

அடுத்த ஆண்டு நடுவில் தமிழ்த்திரு. மறைமலையடிகட்கு நூறாண்டு விழா. இந்த (1975) ஆண்டில் மக்கள் பெயர் மாற்றும் வித்தினை இட்டால்தான் ஆறு மாதத்தில் சிறிதாவது முளைவிட்டு எழும்பிவரும். அத்தமிழ்ப் பெரியவருக்கு நன்றி உணர்வைச் செலுத்தியதாக அமையும்.

—பா. திருநாவுக்கரசு, சென்னை-36,

பாவலர் பெருஞ்சித்திரனாரின் பாடல் தொகுப்பு (கனிச்சாறு)

வெளியீட்டுக்குழு அறிக்கை!

அருந்தமிழன்பரீர்!

அன்பின் அகம் கனிந்த கைகூப்பு,

மொழிக்குள்ள அனைத்துச் சிறப்பியல்புகளும் பெற்றுள்ள உலகின் சில மொழிகளில், தமிழ்மொழி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த ஒண்தீந் தமிழில் கழகக் காலத்தில் புலவர் பெருமக்கள் தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கும் பாடல்களைப் படைத்துள்ளனர்: இவ்விருபதாம் நூற்றுண்டில் தோன்றிய புலவர்களில் பாவேந்தர் பாரதிதாசனார் தனிச் சிறப்புப் பெறுகின்றார். அவருக்குப் பின் அவரிடத்தை நிறைவு செய்து, நம் பைந்தமிழ்ப் பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கள் தமக்கே உரித்தான செந்தமிழ் நடையில் பல ஆண்டுகளாக ஆயிரக் கணக்கான பாடல்களை எழுதித் தென்மொழியில் வெளியிட்டுள்ளதைத் தமிழன்பர்கள் நன்கு அறிவர். அவருடைய ஆசிரியவுரைகளோடு, செம்மாந்த பாடல்களும் தமிழர்கட்குப் புத்துணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டியுள்ளன. தமிழ்மொழி, தமிழக விடுதலை, குமுகாயச் சீர்திருத்தம் ஆகியவைபற்றிப் பாவலர் இயற்றியுள்ள பாடல்கள் ஆயிரக் கணக்கான அன்பர்களைத் தட்டியெழுப்பி வீறு பெறச் செய்துள்ளன. தென்மொழியின் முகப்புப் பாடல்களால் ஈர்க்கப்படாதார் எவரும் இல்லை எனலாம்.

"பெருஞ்சித்திரனார் செய்யுட் செய்வதிற் போன்றே புதுக்கதைப் புனைவிலும் தேர்ச்சி பெற்றிருப்பது பாராட்டத்தக்கது. குல, மத, கட்சிச் சார்பின்றித் தமிழாக்கம் ஒன்றையே கருதும் சான்றோர், பிற்காலத்துப் பெரும் பாவேந்தராதற் கேற்ற இவ் விளம் பாவலரை பெரிதும் ஊக்கக் கடவர்" என, இருபது ஆண்டுகட்கு முன்னரே மொழிநூல் மூதறிஞர், ஞா. தேவநேயப்பாவாணராலும்,

" கள்ளம் எப்படி அப்படிக் கடுகளவும் இலாதநெஞ் சினார்முக்
கனிகள் எப்படி அப்படிப் போன்றமுத் தமிழின்மே லன்பர்
குள்ளம் எப்படி அப்படி இலாப்பெருங் கொள்கை யுடையார்
குரைகடல் எப்படி அப்படிக் குணநிறை துரைமா ணிக்கனார்
வெள்ளம் எப்படி அப்படிச் செந்தமிழ்ச் சொற்பெருக் கேற
மேன்மை எப்படி அப்படிப் பட்டதோர் நடையிற்றம் நல்ல
உள்ளம் எப்படி அப்படித் தந்ததோர் உயர்தமிழ் நூல்தான்
உலகம் எப்படி அப்படி நிலைகொள் கொய்யாக் கனியே!"

எனக் கொய்யாக்கனி மதிப்புரையில் புரட்சிப் பாவலர் பாரதிதாசனாராலும் பாராட்டப் பெற்றவருமான பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுத் தனி நூலாக வெளிவருவது இன்றைய சூழ்நிலையில் மிகவும் இன்றியமையாத ஒரு பணி ஆகும்.

நூல் ஐநூறு பக்கங்களுக்குள் அடங்குமென்றும், நூலின் விலை பத்து உருபாவுக்குமேல் பதினைந்து உருபாவுக்குள் அடங்கக் கூடு மென்றும், நூலை அச்சிடப் பத்தாயிரம் உருபா செலவாகும் என்றும் தோராயமாக மதிப்பிடப் பெற்றுள்ளது. தாள் விலை மிக்குள்ள இக் காலத்தில் ஒரிருவர் இந்நூலை வெளியிடுதல் கடினம். எனவேதான் இத் தொகுப்பு நூலை வெளியிட உண்மைத் தமிழன்பர்களின் உதவி வேண்டப் படுகின்றது. அஃதாவது நூலை அச்சிடப் பத்து உருபா முன்பணமாக அனுப்பக் கூடிய ஆயிரம் தமிழன்பர்கள் தொக வேண்டும். விரைவில் தொகை சேர்ந்தால்தான் நூலை உடனே வெளியிட இயலும். பத்து அன்பர்களிடமும் அதற்கு மேலும் பணம் தண்டி அனுப்பும் அன்பர்களுக்கு எங்கள் செலவில் நூல்கள் அனுப்பப்பெறுவதுடன், அவர்கள் முயற்சியும் பாராட்டப்பெறும். குறிக்கப் பெற்ற நூலின் விலை பின்னர் மிகுமாயின் எச்சத் தொகை முன்பணமனுப்பிய அன்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப் பெறும்.

எனவே, நம் முன்னோரைத் தக்காரும் மிக்காருமாகத் தெள்ளத் தெளியக் காட்டுவதும், நாம் மானத்தோடு வாழ்ந்து ஏறுபோல் நீடுநடை நடக்கச் செய்வதும், விடுதலை உணர்வைத் தட்டியெழுப்பி வீறுபெறச் செய்ய ஏதுவாயிருப்பதுமான இத் தொகுப்பு நூல் வெளியீட்டிற்கு மாணுக்கரும், ஆசிரியர்களும், தமிழன்பர்களும், பொதுமக்களும், உலகத் தமிழக் கழகக் கிளைகளும், ஏனைய தமிழ் மன்றங்களும், தனித்தும் தொகுத்தும் தொகையைப் பணவிடை மூலம் கீழே குறிக்கப் பெறும் முகவரிக்கு அனுப்பி, அன்னைத் தமிழின் தொன்மைப் புகழினை என்றும் நின்று நிலவச் செய்யும் அருந்தொண்டிற்கு உறுதுணையாகப் பல்லாற்றானும் உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இன்னவண்ணம்,

1. மறை. நித்தலின்பன், கோவை.
2. ப. துரையரசன், அவநாசி.
3. க. இளமுருகன், பு. புளியம்பட்டி.
4. தமிழப்பன், திருப்பூர்.
5 முத்துக்குமரன், பல்லடம்.
6. இளமாறன், நீலமலை.
7. தமிழவேள், பழங்கரை.

பணமனுப்ப வேண்டிய முகவரி :

புலவர் கா. இளமுருகன், எம்.ஏ.. டி.ஆர்.எசு; பி.தி.,
" மணிவாசகர் இல்லம் "
1/74, நம்பியூர்ப் பாதை,
புன்செய்ப் புளியம்பட்டி அஞ்சல் (638452)
கோவை மாவட்டம்.

0 : 445 : விடுதலைக்கு வித்தூன்றிய தனித்தமிழின் தனிப் பாவல! வணக்கம். 'தென்மொழி'யின் நலங் காணவே அண்மையில் சென்னைக்கு ஓடோடி வந்தேன். நிலைகண்டு 'நலமில்லை' என்பதுணர்ந்தேன். இனம் வாழப் போராடும் எந்தமிழின் பாவலர்க்கு இப்படியும் ஒரு நிலையா? மொழிகாக்க விழைந்துள்ள முனைவர்க்குத் துணை நிற்க ஒருவருமில்லையா? குருதியோடிய தமிழர்தம் உடம்பில் சாக்கடை நீர் ஓடத் தொடங்கிவிட்டதா? ஒன்றும் உணர்கிலனே!

"செந்தமிழ்க்கு நின்ற உயிர்—இந்தி வந்தால் நின்று விடும்" என்ற நிலைமாறி, "இந்தி இன்றேல் தேநீர் முதற்றொடங்கித் திரைப்படம் வரை'–எதுவுமில்லை; 'இனி நிறைவுமில்லை" என்னும் நிலை தமிழகத்தில் உருவாகியுள்ளமை கண்டு மிகவும் வருந்துகிறேன். இதுதான் சிவலிங்கமும், அரசேந்திரனும் இன்னோரன்ன பிறரும் இன்னுயிர் நீத்ததின் விளைவோ? பார்க்குமிடங்களெல்லாம் இந்தித் திரைப்படச் சுவரொட்டிகள்தாம். என்னையா விளங்கிற்று என்று கேட்டால் இனிமையான இசையென்றும், இதுபோன்ற பாடலை இனிக் கேட்டல் அரிதென்றும் சொல்கின்றான். இந்நிலையில் இவன் உருப்படுவது எந்நாளோ? இதுபோன்றோர் ஊமைகளாய், குருடர்களாய், செவிடர்களாய், முடவர்களாய், நொண்டிகளாய்ப் பிறந்திருப்பின், முனைந்து நிற்கும் ஒருவருக்கு முட்டுக் கட்டைகளாய் இல்லாமலாவது இருந்திருக்க முடியும்.

'ஆரியப் பார்ப்பனர்தம் அளவிறந்த கொட்டங்களை' அணுவணுவாய் எடுத்துரைத்தும் அறிகிலாது; அவர் கால் வருடி வாழ்பவர்களை என்னவென்றுரைப்பது? ஐயா, தமிழர்கள் உருப்படார்கள். தங்கள் நிலையை மாற்றிக் கொள்ளுங்கள், கைவிடுங்கள், போலி வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள். பிறகாவது மனநிறைவுடன் வாழ இயலும். எழுதியெழுதிச் சோர்ந்த கைகள் இனியாவது வலுவுடனிருக்கட்டும். நினைந்து நினைந்து உள்ளம் நெக்குருக வேண்டுவதில்லை. புழுங்கிப் புழுங்கிச் சாவதினும், 'ஓ'வென்று அழுவதினும், 'ஆகா!', 'அப்படியா', 'என்ன அருமை', 'மிகவும் சரிதான்' என்று தொடங்குங்கள். 'உலகத்தோடொட்ட ஒழுக' இதுதான் வழியென்று நினைக்கிறேன். பெண்டு, பிள்ளை, உற்றார் மற்றாருடன் இனிது வாழலாம். இன்றெனில் 'முன் புதையுண்ட எம்-முத்தமிழ்ச் சிறப்பினை, மன்பதைக் குணர்த்தல் எம்-மண்ணுயிர் வாழ்க்கை' என்று சொல்லிக்கொண்டே மண்ணுக்குள் செல்லவேண்டியதுதான்!

—நாட்டுச்சாலைத் தமிழன்பன், அறி.இ., க.மு., சாகர். (ந.பை)

0 : 446 : பாவலரய்யா, தென்மொழியின் வாயிலாகத் தங்களின் எண்ணங்கள் தமிழனின் குருதியைச் சூடேற்றி வருவது கண்டேன். என்றாலும் தமிழன் இன்னும் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளவில்லை. நாம் அறிவு பெற்று விட்டவர்களாக நடித்துக் கொண்டிருக்கிறோம்? இங்கே நடப்பது என்ன? வெற்று ஆரவாரக் கூச்சல்! வெறித்தனமான அரசியல்! காசுக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள் நம்மிடையே நடமாடுகின்றனர்? எப்படியெப்படியோ இருந்தவனெல்லாம் எப்படியெப்படியோ வாழ்ந்து கொண்டிருக்கிறான்! தலையிலே ஒன்றுமில்லாததுகள் எல்லாம் தலை கால் புரியாமல் ஆட்டம் போடுகின்றன. உண்மை ஒதுங்கி

(அடுத்த பக்கம் பார்க்க)

நிற்கிறது. பொய்ம்மை உலா வருகிறது. வால் பிடிப்பவனுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. வலிமையுள்ளவன் வாய் பேசுகிறான். சட்டம் காசுக்காக வளைகிறது. கல்வியோ, கண்ணாமூச்சு ஆடுகிறது. பாலுறவைப்பற்றிய பச்சைப் பொத்தகங்கள் பொதுவிடங்களிலே தலையை நீட்டுகின்றன. ஏக்கம் நிரம்பிய விழிகளுடனும், இனந் தெரியாத உணர்வுகளுடனும் அவற்றை வாங்கிக் "கசடறக் கற்க" இளைஞர் கூட்டம் இங்கே அணியமாக இருக்கின்றது.

பேருந்து நிலையங்களிலும் பிறவிடங்களிலும் பெண்டிரைப் பகடி செய்து இளைஞர் கூட்டம் காலம் கழிக்கிறது. வயிற்றுக்கு உணவில்லை! வாழுவதோ பெருந்தொல்லை! இடிந்து போன கோவில்கள் மீண்டும் எழுகின்றன. கல்விக்கு ஒருபுறம் செலவு! கடவுளுக்கு ஒருபுறம் செலவு! இரட்டைப் புனைவுகள் எத்தனை நாளைக்கோ? நாகரிகம் அடைந்துவிட்டதாக நம்மை நாமே தட்டிக் கொடுத்துக் கொள்கிறோம். "பண்பாடு மிக்கவர்கள்" என்று பறை சாற்றிக்கொள்கிறோம்? உண்மை என்னவென்றால் மாந்தர்களாக வாழ நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை! தங்கள் பணி சிறக்கட்டும்!

—பெருவை-இளஞ்சேரன், பெருவளப்பூர்.

0 : 447 : "ஓராண்டுக்காலம் வரை 'தென்மொழி' படித்துப் புத்துணர்ச்சி பெற்றுப் புது மாந்தனாக உலவுகின்றேன். தமிழுக்கும் தமிழினத்திற்கும், தமிழகத்திற்கும் தென்மொழிமூலம் நீங்கள் ஆற்றிவரும் தொண்டு, மிகப்பெரியது; பாராட்டிற்குரியது. தூங்கியும், அடிமைத்தனமாக, கோழைகளாக, பேடிகளாக, வயிறு வளர்க்கும் தமிழர்களைத் தட்டியெழுப்பி விடுதலை உணர்ச்சி ஊட்டிவரும்நீங்கள் பல்லாண்டு வாழவேண்டுமென்று வாழ்த்தி வணங்குகின்றேன்.

யாருக்கும் எதற்கும் அஞ்சாமல், அறைகூவல் விடுத்து, ஆரியரின் கொட்டத்தை அடக்கி, மூட நம்பிக்கைகளை அடித்து நொறுக்கி, அரிமாப்போல் பீடுநடை போடுகின்ற நீங்கள், இன்றைய தமிழினத்தின் தந்தை என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் பாடல்களைப் படிக்கும்போது, உண்மையிலேயே என் நிலை மறந்துவிடுகின்றேன். உங்கள் பாடல்களில் பொதுவுடைமைக் கருத்துகள், மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, தூய தமிழ் எல்லாம் நிரம்பி காணப்படுவதால், புரட்சிப் பாவலருக்குப் பிறகு, இன்றைய புரட்சிப் பாவலர் நீங்கள்தாம் என்பதை பெருமையோடு கூறிக்கொள்கின்றேன். 'தென்மொழி' படிக்கப் படிக்கத் தெவிட்டவில்லை. தமிழ் வளர்க்கின்றோம் எனக் கூறிக்கொண்டு தாளிகைகள் நடத்தும் தமிழ்ப் பகைவர்கள் 'தென்மொழி'யைப் படிப்பின் உண்மையாக வெட்கித் தலை குனிவார்கள். தமிழகத்தில் தனித்தமிழில் புரட்சி செய்துவரும் ஒரே இதழ் தென்மொழியே. தென்மொழிக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்; வணக்கம்.

—அ, தங்கவேல், மடப்புரம், தஞ்சை.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005, தமிழகம்.